# வால்காட்டுக்கும் டான்சேக்கும்

Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 8 (8-9-66) இதழ் 209

பராபவ ஆவணி 23 ஜ/ அவ்வ 22 வியாழக்கிழமை

## தலா 5 வருடச்சிறை

### கடத்தல் பேர்வழிக்கு சென்னை நீதிமன்றம் தண்டனை

சென்னை, செப் 7

சர்வதேச கடத்தல் பேர்வளி என்று வர்ணிக்கப்படும், அமெரிக்கரான வால்காட்டுக்கும் அவரது சகாவான டான்சே என்பவருக்கும் இன்று சென்னை செஷன்ஸ் நீதிமன்றத்தில் 5 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

கள்ளபாஸ்போர்ட் தயாரித்ததாகவும், மோசடிகள் புரிந்ததாகவும், இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்தியாவில் இருந்த சமயத்தில் சர்வதேச ரீதியில் வால்காட் கடத்தல் மோசடிகளில் ஈடுபட்டதாகக் கைது செய்யப்பட்டிருந்தார்.

கைதுசெய்யப்பட்டு காவல்சிறையில் வைக்கப்பட்டிருந்தபோது சிறைக்காவலாளிகளை ஏமாற்றிவிட்டு வால்காட்டும் அவர் நண்பரும் வெளியேற முயற்சி செய்தார்கள். சிறைமதில்கள் மீது ஏறியபோது இவர்களைக் கண்டுபிடித்த அதிகாரிகள் கற்களால் அடித்து கீழே இறக்கினார்கள்.

வால்காட் இந்தியாவில் மட்டுமின்றி வேறு பல நாடுகளிலும் வெற்றிகரமாக கடத்தல் வேலைகளை செய்து பிடிபடாமல் இருந்து வந்ததாகக் கருதப் படுகின்றது.

# ஜே. ஆர், பிலிப், ஹெயினை கொலைசெய்யத்திட்டம்

## முதல் எதிரி தெரிவித்ததாக ஒபாதா சாட்சியம்

### "சாஸனத்தில் இரத்தத்திலும் கையெழுத்திட்டோம்"

கொழும்பு, புதன்

**இன்று காலையில் நடைபெற்ற சதிவழக்கு விசாரணையில் முதலாவது சாட்சி ஒபாதா சாட்சியமளிக்கையில்; திட்டங்கள் நிறைவேறுவதற்கு திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, திரு. பிலிப் குணவர்த்தன, பிரிகேடியர் ஹெயின் ஆகியோர் கொலை செய்யப்படவேண்டும் என்று முதல் எதிரி ஹொரந்தமுனி தம்மிடம் தெரிவித்திருந்ததாகக் கூறினர்.**

"அரசாங்கத்தை வீழ்த்துவது, இடங்களைக்கைப்பற்றுவதுசம்பந்தமான அந்ததிட்டங்களின் நோக்கங்கள்பற்றி முதல் எதிரி என்னிடம் விளக்கமாகத் தெரிவித்த பின்னர். டைப்பு ஒன்றில் இரத்தத்தில் கையெழுத்திடுமாறு அவர் கோரினர். நான் அப்படியே கையொப்பமிட்டேன்" என்றும் முதல்சாட்சி ஒபாதா இன்று காலையில் நடைபெற்ற விசாரணையில் தெரிவித்தார்.

#### இரத்தத்தில் கையெழுத்து

சிங்கள சமூகத்தையும் பௌத்த மதத்தையும் பாதுகாப்பதற்காக தங்களது உயிரை அர்ப்பணிக்க உறுதி பூண்ட சாஸனமொன்றில் சிலருடன் நானும் இரத்தத்தில் கையெழுத்திட்டேன் என்று பெப்ரவரி 17 சதிவழக்கு இன்று காலை கொழும்பு பிளாக்ஸ்டவ் வீதியிலுள்ள விசேஷ நீதிமன்றத்தில் பிரதம மாஜிஸ்திரேட் திரு. பி. ஜி. எஸ். டேவிட் முன்னிலையில் மீண்டும் விசாரணைக் கெடுத்துக் கொள்ளப்பட்ட பொழுது முதலாவது சாட்சி எச். எச். டி. எல் ஏ. ஒபாதா சாட்சியமளிக்கையில் கூறினர்.

#### ஹொரந்தமுனி வீட்டில்

"சார்ஜண்ட் ஹொரந்தமுனி வீட்டில் வைத்து இந்த சாஸனத்தில்கையெழுத்திட்டோம். இதில் வேறு நபர்களின் பெயர்களும் இருந்தது. முதலில் கையெழுத்திட்டு பின்னர் இரத்தத்தில் விரலடையாளமிட வேண்டியிருந்தது. என்னுடன் சார்ஜன்ட் ஒஸ்கார் விஜயசிங்கா சார்ஜன்ட் எக்கநாயக்கா ஆகிய இருவரும் கையெழுத்திட்டனர். என்னுடைய விரலை சார்ஜன்ட் விஜயசிங்கா வயரினுல் குத்தி இரத்தத்தை எடுத்தார். எனது கையிலிருந்து இரத்தம் வெளிவந்த பொழுது எனது கையொப்பத்துக்கு அருகாமையில் என்னை ஒப்பமிடச்செய்தார்" என்றும் ஒபாதா தெரிவித்தார்.

## சதி வழக்கு

#### மாஜிஸ்திரேட் குறுக்கீடு

இச்சந்தர்ப்பத்தில் முடிக்குரிய வழக்கறிஞர், அந்த டைப்பில் கையொப்பமிட்ட பெயர் விபரம்பற்றி சாட்சியிடம் கேட்ட பொழுது, முதலாவது எதிரி சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. கே. சி. டி. சில்வா இதனை ஆட்சேபித்து டைப்பை கோர்ட்டில் சமர்ப்பிக்கப்படாதவரை இப்படியான கேள்வி கேட்க முடியாதென்று கூறினர்.

இந்தப் புத்தகம் காணுமற் போய் விட்டதென்று முடிக்குரிய சாட்சி கூறவே மாஜிஸ்திரேட் குறுக்கிட்டு அந்தப் புத்தகத்திலுள்ளவைபற்றி கேள்விகள் கேட்கப்படுமுன்னர் அந்தப் புத்தகம் காணுமற் போய் விட்டது என்பதை நிரூபிக்க வேண்டும். என்று கூறினர்.

#### சிங்கள சமுகத்தையும் மதத்தையும் பாதுகாக்க

சாட்சி ஒபாதா தொடர்ந்து சாட்சியமளிக்கையில்; பௌத்த மதத்தையும் சிங்கள சமுகத்தையும் காப்பாற்றுவதற்கு இந்த அரசாங்கத்திடமிருந்து எந்த விதமான உதவிகளும் எதிர்பார்க்க முடியாதென்றும் மக்களிடமிருந்தே உதவி பெற முடியுமென்றும் ஹொரந்தமுனி அவரது வீட்டில் தம்மிடம் கூறியதாகத் தெரிவித்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

வாங்கிவிட்டீர்களா!

ஈழநாடு
நல்லைக்கந்தன்
வண்ணமலர்
விற்பனையாகிறது
சஞ்சிகைவடிவில்
பக்கங்கள் — 48
விலைசதம் — 50

தென்னுபிரிக்க

## கொள்கை மாருது என்று ஆளும் தேசியகட்சி அறிவிப்பு

### கொலைத் திட்டத்தில் வேறு எவருக்கும் தொடர்பில்லையாம்

கேப்டவுண், செப். 9

கொலைசெய்யப்பட்ட தென்னுபிரிக்க பிரதமர் வேர்வூட் வகுத்த இனவெறிக் கொள்கை தொடர்ந்து பின்பற்றப்பட்டுவரும் என்றும் அடிப்படைக் கொள்கையில் எவ்விதமாற்றங்களும் இருக்காது என்றும் தென்னுபிரிக்க ஆளும் தேசியகட்சி இன்று அறிவித்துள்ளது.

இதற்கிடையில் பிரதமரின் கொலைபற்றிய விசாரணை நடத்திவரும் பொலிசார் இன்றுவெளியிட்டுள்ள அறிக்கையொன்றில். கொலைத்திட்டத்தில் வேறு எவரும் ஈடுபடவில்லையென்றும் மேலும் எவரும் கைது செய்யப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

கொலைக்கான காரணத்தைக் கண்டறிவதில் பொலிசார் தொடர்ந்து முயற்சித்துவருகின்றனர்.

## கல்கிசை கடலில் நீராடிய 3 இளைஞர் கடலுக்குப் பலி

கொழும்பு, புதன்

கல்கிசைக்கு சற்றுத் தூரத்தில் கடலில் குளித்துக் கொண்டிருக்கும்போது மூன்று இளைஞர்கள் மூழ்கி மரணமானுர்கள். இந்தச் சம்பவம் நேற்று நடைபெற்றது.

மீட்பு நடவடிக்கைகளில் உடனடியாக இறங்கிய சிலர் இரண்டு சடலங்களை வள்ளங்களில்கரை சேர்த்தனர் இந்த இரண்டு சடலங்களும் நுகேகொடையைச் சேர்ந்த ரெகிசில்வா, செம்ஸன் ரட்ணுயக்கா ஆகியவர்களினுடையவை என்று தான் அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டது.

மூன்ருவது பையனுடையவை என்று கருதப்படும் கறுப்புச்சட்டையொன்றையும் பெனியன் ஒன்றையும், கைக்கடிகாரம் ஒன்றையும் பொலிசார் கடற்கரையில் கண்டுபிடித்துள்ளனர்.

இன்று காலையில் மூன்ருமவரின் சடலமும் கடற்கரையில் ஒதுங்கிக் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனுல் அது யாருடையது என்று இன்னும் அடையாளம் கண்டுபிடிக்கப்படவில்லை.

## "திரு. பொன்னம்பலம் பற்றி நாங்கள் பேசவில்லை"

— எஸ். ஜே. வி.

யாழ்ப்பாணம், வியா.

தமிழரசுக்கட்சியின் தலைவரும்காங்கேசன்துறை எம். பி.யுமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பின்வரும் அறிக்கையை விடுத்துள்ளார்.

2-9-66-ம் திகதி 'ஈழநாடு' பத்திரிகையில், நானும் அமைச்சர் திருச்செல்வமும், கௌரவ பிரதம மந்திரியை மாவட்ட சபைகள் பற்றிக் கண்டு பேசியபோது 'ஐ நா. சபைக்குச் சென்றுள்ள ஜி. ஜி. பொன்னம்பலம் நாடு திரும்பிய பின்னரே இதைக் கொண்டுவருமாறு அவர் கேட்டுள்ளதால். அவர் திரும்பியதும் இதைக் கொண்டு வரலாமென பிரதமர் டட்லி தெரிவித்தார் எனவும் அறியப்படுகிறது' என்று ஒரு செய்தி முதற்பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இது முற்றிலும் தவருன செய்தி. எங்கள்பேச்சுவார்த்தையின் போது திரு.பொன்னம்பலம் அவர்களைப் பற்றியோ, அவர் ஐ. நா.விலிருந்து திரும்புவது பற்றியோ அவர் திரும்பும்வரை எமது ஆலோசனைகளைப் பின்போடுவது பற்றியோ ஒன்றும் பேசப்

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## தேவை

**பங்காளர்கள்:**

கிராபனமொன்றுக்குப்பங்காளர் தேவை. பங்கொன்று 85/-. 4 பங்குகளுக்கு மேல் ஒருவர் பெற முடியாது. விபரங்களுக்கு முத்திரையும் முகவரியும் அனுப்பி அறியவும். காரியதரிசி, வாணி வேப்பி மெடிக்கல் இன்டஸ்றீஸ் அன் கோ, 51, ஈச்சமோட்டைவீதி, யாழ்ப்பாணம். 1232

**தொழிலாளர்கள்:**

மூடைகளி தயாரித்து புகைவண்டியிலும் லொறியிலும் ஏற்றுவதற்கு அனுபவமுள்ள தொழிலாளர்கள் தேவை. கூடிய வேதனம் வழங்கப்படும். நேரில் வருக. டாக்டர் அம்பலவாணர், 51, ஈச்ச மோட்டை வீதி, யாழ்ப்பாணம். 1233

**மலகூடத்தொழிலாளி**

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்கு மலகூடத் தொழிலாளி ஒருவர்தேவை. நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகளுடன் 16-9-66-ந் திகதிக்கு முன் கிடைக்கத்தக்கதாக மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை கௌரவ காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும். 1243

**விற்பனைசெய்வதற்கு பெண்கள்**

வீடுகளுக்குச் சென்று விற்பனைசெய்வதற்குப் பெண்கள் தேவை. அனுபவம் வாய்ந்தவர்களுக்கு விசேஷ சலுகை வழங்கப்படும். 20-9-66க்குமுன் நேரில் தொடர்பு கொள்ளவும். இ. இராமச்சந்திரன், யாழ்ப்பாணப் பிரதிநிதி, லோவி கெமிக்கல்ஸ், காங்கேசன்துறை வீதி, கொக்குவில் சந்தி 1244

**மணமகள்**

23 வயது வாலிபருக்கு ஓர் மணமகள் தேவை, விதவையோ, அங்கஹீனரோ ஏற்றுக் கொள்ளப்படும். விபரங்களுக்கு: விளம்பர இலக்கம் 1108, ஈழநாடு மே/பா என எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும். 1108

**டிராக்டர் சாரதிகள்**

டிராக்டர் சாரதிகள் தேவை. இவர்களுக்கு, அவர்கள் செய்யும் வேலை அடிப்படையில் சம்பளம் வழங்கப்படும். மனுச் செய்க: திரு. கே. சண்முகம், இல: 135, மீதோட்டமுல்லை வீதி, வெல்லம்பிட்டியா. 1240

## விற்பனைக்கு

**கூப்பன் பதிவு புத்தகம்**

அரிசிப்பங்கீட்டுப்புத்தகங்கள் வாரந்தோறும் பதியக் கூடிய இடாப்பு விற்பனைக்கு உண்டு. வியாபாரிகளுக்கு மிக வசதியானது. இப்போது கிடைக்கும். ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம். 1241

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, சேந்தி முதலிய வை கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றறிக்கை இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பசுபூரணானந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.




## கொழும்பு

**வியாழன் 8 - 9 - 66**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**844 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-45 நாதாஞ்சலி, 6-50சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15துதிப்பாடல்கள், 7-45 திரைஇசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**844 மீட்டர்&49 மீட்டர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

**844 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர்மன்றம், 5-45 இசை மெட்டு.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 தமிழோடிசை பாடல், 7-00 பேச்சு, 7-15 தாளவாத்தியக்கச்சேரி, 7-30 நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 மெல்லிசை, 9-30 நிலைய ஒலிப் பதிவுகள்.

# "பொறுப்புணர்ச்சியும் சமரச நோக்கும் தேவை"

சுழிபுரம், புதன்

"பொறுப்புணர்ச்சியும் சமரசநோக்குடனும் உழைக்கக் கூடிய தலைவர்களே இன்று இலங்கைக்குதேவை. இவர்களை உருவாக்குவதில் கிராமமுன்னேற்றச் சங்கங்கள் சனசமூக நிலையங்கள் முன்னின்று உழைக்கவேண்டும். மதமொழி வேறுபாடுகளின்றி எல்லோரும் ஒற்றுமையாக இந்நாட்டை கட்டி வளர்ப்பதில் ஒன்றுபட்டு உழைப்பார்கள் எனில் நாட்டில் நல்லெண்ணம் வளர்வதுடன் சகல பிரச்சினைகளும் வெகு சுலபமாகத்தீர்க்கக் கூடிய நிலை உருவாகும்" என்று பனிப்பாய் கிராம முன்னேற்றச்சங்க ஆண்டு விழாவுக்கு தலைமை வகித்துப் பேசிய சமூகஜோதி சி. தியாகராசா குறிப்பிட்டார். அதிகார்செல்லமுத்துமண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தியாகராசாமேலும் பேசுகையில், சுயசேவை உழைப்பின் அந்தஸ்து, தன் நம்பிக்கை ஆகிய தன்மைகளை ஊட்டுவதே கிராம முன்னேற்றச் சங்கத்தின் நோக்கங்களாகும் என்றார்.

வலி. மேற்கு காரியாதிகாரி திரு. மாணிக்கம் நடராசா பேசுகையில், இன்று படித்துவிட்டுவேலைவாய்ப்புகள் பெறுவதற்கு ஆயிரக்கணக்கான வாலிபர்கள் தெருத்தெருவாக அலைகிறார்களென்றும் வேலைவாய்ப்பு இல்லாமல் ஒரு புறமும் உணவு பற்றாக்குறைமறுபுறமும் நாட்டுக்கு ஓர் பெரும் பிரச்சினையாக இருக்கின்றதென்வும் இவற்றை எந்த வழியில் தீர்க்கலாம், எப்படித் தீர்க்கலாம் என நாம் பற்பல திட்டங்களைத் தீட்டிவருகிறோமெனவும்கூறினார்.

ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலைய அதிபர், கிராம முன்னேற்றச்சங்க மேற்பார்வை அதிகாரி எஸ். நடராசா மற்றும்பலர்பேசினர். பின்னர் நடப்புவருட நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

# காங்கேசன்துறை துறைமுகத்தில் இரு கப்பல்கள்

மாவிட்டபுரம், புதன்

சைப்பிரஸில் இருந்து 'எஸ். எஸ். ராக்ஸி ஆசிஸ்,' என்ற கிரேக்க கப்பல் 10,160 தொன் கிப்சத்துடன் (உப்புக்கல்) நேற்று நள்ளிரவு காங்கேசன்துறை முகத்துறைத்தை வந்துசேர்ந்தது. காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலைக்காக இக்கப்பல் வருவிக்கப்பட்டுள்ளது.

இப்பருவகாலத்தில் வந்த கப்பலின் தொகை இதனுடன் ஆறுகிறது இக்கப்பலின் இறக்குமதி வேலைகளையாழ். மாவட்டதுறைமுக தொழிலாளர், சமாசத்தினர் ஏற்றுள்ளனர்.

நாளை ஆரம்பமாகும் இறக்குமதி வேலைகள் 3 வாரத்தில் முடிவடையும்.

இங்கு 'எஸ். என். யூடி' என்ற சுவிஸ் கப்பல் கம்போடியாவிலிருந்து கொண்டுவந்த அரிசியைஇறக்குமதி செய்துகொண்டிருக்கிறது. 9450 தொன் அரிசியுடன் வந்த இக்கப்பல் சுமார் 4456 தொன் அரிசியை இதுவரை இறக்கிவிட்டது

(5-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## மந்திரி ஆசை!

சினிமாத் தொழிலில் மந்திரிக்கு முதலிடம் கிடைக்க வேண்டும் என்று மந்திரி வெங்கடராமன் ஆசைப்படுகிறார். தென்இந்திய பிலிம் வர்த்தகசபை சினிமா அதிபர்கள் சங்க புதிய கட்டட அடிக்கல்நாட்டு விழாவின்போது மந்திரி தமது ஆசையை வெளியிட்டார்.

ஃ ஃ ஃ

## 'குழந்தை பிறக்கும்!'

— அண்ணுதுரை

"முன்பு சீர்திருத்தத் திருமணம் செய்து கொண்டால் குழந்தை பிறக்குமோ, பிறக்காதோ என்று சந்தேகப் படுவார்கள். அது தவறு! சீர்திருத்தத் திருமணம் செய்துகொண்டால் நிச்சயமாகக் குழந்தை பிறக்கும்;" என்று தர்மபுரியில் சீர்திருத்தத் திருமணம் ஒன்றுக்குத் தலைமை தாங்கிப் பேசுகை தி. மு. க. தலைவர் திரு. சி. என். அண்ணுதுரை சொன்னார்.

REGAL—JAFFNA
NOW SHOWING
RICHARD HARRIS
in
This Sporting Life
(Adults Only)

# நிர்வாகக் குழுக் கூட்டம்

உடுவில், புதன்

சங்குவேலி சன சமூக நிலையத்தின் ஆதரவில் அரசாங்க உதவியுடன் கட்டிமுடிக்கப் பட்ட புதிய நெசவாலையை திறப்புவிழா சம்பந்தமான விஷயங்களை ஆராய்வதற்காக சங்குவேலி சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் சங்கத் தலைவர் ஆசிரியர் திரு. சி. அரசகுரைரத்தினம் தலைமையில் நிர்வாகக் குழுக்கூட்டம் நடைபெற்றது.

இம்மாதம் 9-ம் திகதி மாலை 6மணிக்கு புதிய நெசவாலையின் திறப்புவிழா நடாத்துவதென முடிவுசெய்யப்பட்டது.

# பஞ்சாப் சீரமைப்பு

புதுடில்லி, செப். 7

பஞ்சாப் சீரமைப்புச் சம்பந்தமாக லோகசபாநேற்று பின்னிரவு கூடி ஆராய்ந்தது. இரு திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இன்று தொடர்ந்து பரிசீலனை நடைபெறுகிறது.

# சாரணர் பொன்விழா

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணம் சாரணர் இயக்கத்தின் பொன்விழா இம்மாதம் 16-ந்திகதி ஆரம்பமாகி ஐந்து நாட்கள் தொடர்ந்து நடைபெறும்.

யாழ்ப்பாணம் பழையபூங்காவில் நடைபெறும் இவ் விழாவில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ளபலபாடசாலைகளிலிருந்தும் சாரணர்கள் கலந்துகொள்வார்கள்.

இவ்விழாவை யொட்டி யாழ்ப்பாணம் விளையாட்டு அரங்கினில் நிகழ்ச்சிகள் நடைபெறவிருக்கிறது. சாரணர் இயக்க வளர்ச்சிபற்றிய ஒரு நாடகமும் இடம்பெறும்.

# குப்புறபுரண்டும் ஆபத்துஇல்லை

சிட்னி, செப்.—5

60 பிரயாணிகளுடன் இங்கு வந்த இந்திய ஜெட் விமானம்ஒன்றுகுப்புறபுரண்டது, ஆனால் எவ்வித ஆபத்துமில்லாமல் நிலத்தில் இறங்கியது. அந்தவிமானத்தின் நான்காவது என்ஜினில் கோளாறு ஏற்பட்டதும் மூன்று என்ஜின்களின் உதவியால் அது கீழே இறங்கியது.

# விளம்பரம்

## தேவை

**சாக்குகள்**

75,000 "B" தரச் சாக்குகள் தேவை. விபரத்துக்கு கீழ்க்காணும் விலாசத்துக்கு 14-9-66க்கு முன்னர் காரியாலய நேரத்தில் காரியதரிசியுடன் தொடர்பு கொள்ளவும்.

காரியதரிசி,
வ. ப. வி. உ. கூ. சமாசம்,
111, பிரதானவீதி,
961 யாழ்ப்பாணம்.

## தச்சுத் தொழிலாளரும் மின்சாரத் தொழிலாளரும் தேவை

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைக்குத் தச்சுத் தொழில் பயிற்சியும் மின்சாரத் தொழிலனுபவமும் உள்ள ஒருவர் தேவை. ஹரிஸன் லிஸ்ரர் வெளிச்ச எந்திரத்தை (Harrison Lister Lighting Plant) இயக்கவும் பழுதுபார்க்கவும் கூடியவராக இருக்கவேண்டும். மற்றும் சிறுசிறு தொழில்கள் செய்வதற்கும் இணக்கம் உள்ளவராகவும் இருக்க வேண்டும். தண்ணீர் பம்பு, பைப் முதலியன பழுது பார்க்கக் கூடியவராகவும் இருக்கவேண்டும். விரும்புவோர் 1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 23-ம் திகதி பகல் 12 மணிக்கு முன் கிடைக்கத்தக்கதாக மூளாய் கூட்டுறவுவைத்தியசாலை கௌரவ காரியதரிசிக்கு பிறப்பு, கல்வித்தராதரம், ஒழுக்கம்பற்றிய பத்திரங்களின் பிரதிகளுடன் விண்ணப்பிக்கவும். 962

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
நாகேஸ்வரராவ்-அஞ்சலிதேவி
நடித்த
**மாதர்குல மாணிக்கம்**

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
ராமராவ் - அஞ்சலிதேவி
நடித்த
**அன்புவடிவம்**

**மகாத்மா தியேட்டர்**
(நெல்லியடி)
தினசரி 6-30—9-30
சிவாஜி - ஜெமினி
நடித்த
**பந்தபாசம்**

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜிதா (ஹட்டன்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணு (திருமலை)
மொடேர்ண் (பண்டாரவளை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)



சிவாஜி - எஸ்.எஸ்.ஆர்.
பாலையா, ராதா, முத்துராமன், ஸ்ரீராம், நாகேஷ், தேவிகா, புஷ்பலதா
மற்றும் பலர்நடிக்கும்
பாரத மாதா பிக்சர்ஸ்
**பழநி**
இசை: விஸ்வநாதன் - ராமமூர்த்தி
திரைக்கதை - டைரக்ஷன்: பீம்சிங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காமன்வெல்த் பிரதமர்கள் அதிர்ச்சி

## வேர்வூட் கொலை பற்றிக் கேட்டதும்!

லண்டன், செப். 6

நேற்று காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு ஆரம்பமாகி ரொடீஷியப் பிரச்னை மீதான விவாதம் தொடங்கியபொழுது தென்னுபிரிக்கப் பிரதம மந்திரி டாக்டர் ஹென்றி வேர்வூட் கொலைசெய்யப்பட்டார் என்ற செய்தி அவர்களுக்குக் கிடைத்தது.

செய்தி கிடைத்தவுடன் காமன்வெல்த் மகாநாட்டுப் பிரதிநிதிகள் அதிர்ச்சிக்குள்ளானர்கள். சிங்கப்பூர் பிரதமர் லிகுவான்லி தாம்மிகவும் கவலைப்படுவதாகக் கூறியதுடன் இம்மாதிரியான ஆட்சி நடத்தினுல் முடிவும் இப்படித்தான் இருக்கும் என்று கருத்து வெளியிட்டார்.

நைஜீரிய பிரதிநிதி இந்த கொலையின் மூலம் ரொடீஷிய ஸ்மித் ஆட்சியினரும் பாடம் படிப்பார்கள் என்று கூறினர்.

நேற்று தென்னுபிரிக்கப் பிரதம மந்திரி டாக்டர் ஹென்றி வெர்வூட் இரேக்க இனத்தவரான ஒரு வெள்ளையரால் கழுத்திலும் மார்பிலும் கத்தியினுல் குத்திக் கொலை செய்யப்பட்டார். பார்லிமெண்டின் கீழ்ச் சபையில் அங்கத்தவர்களின் முன்னிலையில் இந்தக் கொலை நடைபெற்றது.

கொலைகளினுலும், குழப்பங்களினுலும் நிறத்திமிரையோ அல்லது வேறு அக்கிரமங்களையோ தீர்ப்பதற்கு முடியாதென்று காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் கலந்துகொள்ளும் ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் பலர் கருத்து வெளியிட்டுள்ளார்கள்.

## ரொடீஷிய விவகாரத்தில் அவகாசம் தேவை

நேற்று காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டுப் பிரதிநிதிகளை வரவேற்றுப் பிரிட்டிஷ் பிரதம மந்திரி திரு. வில்ஸன் பேசியபோது ரொடீஷியாவில் ஸ்மித் ஆட்சியை மேலும் ஸ்திரமான பொருளாதார நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துவதன் மூலம் கவிழ்ப்பதற்கு அவகாசமளிக்கும்படி ஆபிரிக்க நாடுகளைக் கேட்டுக்கொண்டார். ரொடீஷிய ஆட்சியினமீது வன்முறையைக் கையாண்டு பணியவைக்க வேண்டுமென்பதைத் தாம் இன்னமும் எதிர்ப்பதாக திரு.வில்ஸன் தெரிவித்தார்.

### ஸாம்பியாவுக்கு உதவி

ரொடீஷியப் பிரச்னையில் ஸ்திரமான நடவடிக்கை எடுத்துத் தீர்வுகாணப்படாவிடில் காமன்வெல்த்திலிருந்து விலகப்போவதாக ஸாம்பியா பயமுறுத்தியிருக்கிறது.

ஸ்மித் ஆட்சியைக் கவிழ்ப்பதற்குப் பொருளாதாரத் தடைகளை மேலும் ஸ்திரப்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவகாசமளிக்கும்படி பிரதமர் வில்ஸன் ஸாம்பியாவையும் மற்ற ஆபிரிக்க நாடுகளையும் கேட்டுக்கொண்டார். ஸாம்பியாவுக்கு மேலும் பொருளாதார உதவியளிக்கப் பிரிட்டன் முடிவுசெய்திருப்பதாகவும், சுமார் 1 கோடி ரூபாய்க்குத் உதவிகள் வழங்கப்படுமென்றும் திரு வில்ஸன் அறிவித்தார்.

## ஆபிரிக்க நாடுகளின் பிரத்தியேகக் கூட்டம்

காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாட்டில் ரொடீஷியப் பிரச்னை குறித்து மேலும் என்ன நடவடிக்கைகளை எடுப்பது என்பது குறித்து ஆபிரிக்க நாடுகள் ஆலோசித்துவருகின்றன.

மகாநாட்டில் அடுத்த நடவடிக்கையாக என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி கருத்துப்பரிமாறி முடிவுகள் மேற் கொள்வதற்கென்று இன்று ஆபிரிக்க நாடுகள் பிரத்தியேகமான ஒரு கூட்டத்தை நடத்தவிருக்கின்றன.

ஐ நா. சபை மேற்கொள்ளும் கட்டாயத் தடைகள் போன்ற நடவடிக்கையை ரொடீஷியா மீது காமன்வெல்த் நாடுகள் விதிக்க வேண்டுமென்று ஆபிரிக்க நாடுகள் கருத்துக்கொண்டுள்ளன.

## வேர்வூட் கொலையால் நிறத்துவேஷம் மறையாது

### அவதானிகள் அபிப்பிராயம்

கேப்டவுன், செப். 7

தென்னுபிரிக்க பிரதமர் டாக்டர் ஹென்றிவேர்வூட் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஆட்சிப்பொறுப்பை நீதிமந்திரி டோங்கி தற்காலிகமாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

டாக்டர் வேர்வூட் நேற்று வெள்ளையர் ஒருவரால் குத்தி கொலைசெய்யப்பட்டார். இரேக்க இனத்தவரான டிமிட்ரிபாமென்ட் என்ற கொலையாளியின் நோக்கம் இன்னும் தெரியவில்லை. கொலையுண்ட டாக்டர் வேர்வூட் தென்னுபிரிக்காவில் நிறத்துவேஷ கொள்கையின்சிற்பியாகக்கணிக்கப்பட்டுவந்தார். அவருடைய இடத்துக்கு இப்போதைய நீதிமந்திரி அல்லது போக்குவரத்து மந்திரி வரக்கூடும் என்று கருதப்படுகின்றது. ஆபிரிக்க கறுப்பு மக்களுக்கு விரோதமாக டாக்டர் வேர்வூட் கடைப்பிடித்துவந்த வெறுப்புக்குரிய நிறத்துவேஷக் கொள்கைதான் இந்தக் கொலைக்குக்காரணமாகஇருக்குமோவென்றும் சந்தேகம் நிலவுகின்றது. டாக்டர் வேர்வூட் மறைந்துவிட்டதால் அவருடைய கொள்கை மறைந்துவிடாது என்று அவதானிகள் கருதுகின்றனர். அந்தக்கொள்கை மேலும் தீவிரமாக கடைப்பிடிக்கப்படலாம் என்றே தோன்றுகின்றது.

## புகலிடம் கொடுத்தாராம்

### பாதிரி மீது வழக்கு

ரங்கூன், செப். 6

ராணுவத்திலிருந்து தப்பிச் சென்ற ஒருவருக்கு புகலிடம் கொடுத்த குற்றத்துக்காக பிரஞ்சு கத்தோலிக்க போதகர் ஒருவர் மீது வழக்குத் தொடரப்பட இருப்பதாக பத்திரிகைச் செய்தியொன்று கூறுகின்றது.

லியால் லிவா மியின்ட் என்ற ராணுவ காப்டனுக்கு புகலிடம் கொடுத்து அவர் தப்பிச் செல்வதற்கு உதவி புரிந்துள்ளதாக பிதா பொனிஜீன் ஆன்ட்ரி என்பவர் விசாரிக்கப்படவிருக்கிறார் என்று அந்தப் பத்திரிகை தெரிவிக்கின்றது. (பி. டி. ஸி)

## புரட்சி தோல்வி

பீரட், செப். 6

சிரியாவில் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு மேற்கொள்ளப்படவிருந்த ராணுவ புரட்சியொன்று முறியடிக்கப் பட்டிருப்பதாக டமாஸ்கஸ்வானொலி அறிவித்திருக்கின்றது. (பி. டி. ஸி)

## புலிகளுக்கு 29 பேர் இரை

கல்கத்தா, செப். 6

இந்த வருடம் முதல் ஏழுமாத காலத்தில் 29 பேர் புலிகளுக்கு இரையாகியுள்ளனர். வங்காளக்குடாக்கடலுக்கருகில் உள்ள சுதார்பாங் காடுகளில்தான் இத்தனை பேர் இரையாகியுள்ளனர். தேன் எடுக்க, விறகு சேகரிக்க, அல்லது தேன் மெழுகு எடுப்பதற்காக காடுகளுக்கு சென்றவர்களே இப்படி புலிகளின் வயிற்றுக்கு இரையாகியுள்ளனர் என்று மேற்கு வங்க சட்டசபையில் அறிவிக்கப்பட்டது. (பி. டி. ஸி.)

வியட்னும் பிரச்னை

## பேச்சுவார்த்தை நடத்துவதில் சீனுவுக்கும் நம்பிக்கை

ஹாங்காங், செப். 7

வட வியட்னும் பிரச்சினையை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்துக்கொள்ளும் சாத்தியக் கூறுகளை சீனு நிராகரிக்கவில்லையென்று செஞ்சீன வெளிவிவகார மந்திரி திரு. சென்யி கூறியுள்ளார்.

அமெரிக்காவுக்கும் சீனுவுக்குமிடையில் நல்லுறவு ஏற்படும் சாத்தியம் உண்டு என்றும் அவர் கருத்து வெளியிட்டு இருக்கின்றார்.

## பாரசூட் மூலம் இறங்கிய பெண்

நியுயோர்க், செப். 6

7,500 அடி உயரத்திலிருந்து பாரசூட் மூலம் இறங்கிய 19 வயதான ஒரு இளம் பெண் ஆற்றுக்குள் மூழ்கி மரணமானுர்.

விமானத்திலிருந்து இறங்கும் முயற்சியில் அவர் ஆற்றுக்குள் வீழ்ந்தார். ஜென்கின்ஸ் என்ற அந்தப் பெண்ணின் கணவர் அவருக்கு சற்று முன்பதாகத்தான் விமானத்திலிருந்து பாரசூட் மூலம் இறங்கினுர். (பி. டி. ஸி)

## மூன்று பேர் குழு!

### அமெரிக்காவிலிருந்து பாரதம் வந்தது

புதுடில்லி, செப். 7

கூட்டுறவு இயக்கம் பற்றியும், அது சம்பந்தமான விளக்கங்கள் கொடுப்பதற்காகவும் அமெரிக்காவைச் சேர்ந்த மூன்று பேர் கொண்ட குழு ஒன்று நேற்று இங்கு வந்து சேர்ந்தது. இவர்கள் பாரதத்தின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்து கூட்டுறவு பற்றி விளக்கம் கொடுப்பர். இங்குள்ள கூட்டுறவு இயக்கங்களையும் பார்வையிடுவர்.

## ஆயுதபரிகரண உலகப்பிரசாரம்

டோக்கியோ, செப்.5

அமெரிக்காவில் பிறந்து, ஹிரோஷிமா அணுகுண்டு வீச்சின்போது தப்பிய ஜப்பானியர் ஒருவர், அணுகுண்டு ஆயுத பரிகரணம் பற்றிப் பிரசாரஞ்செய்யும் நோக்கத்துடன் அடுத்த வாரம் 16 மாதகால உலக சுற்றுப்பிரயாணம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறார். (பி. டி.. ஸி.

## தொழில்நாடாக பாரதம் விளங்கலாம்

### சிங்கப்பூர் மந்திரி

பெங்களூர், செப்-7

உலகத்திலே ஒரு தொழில் வளம் நிறைந்த நாடாக பாரதம் விளங்க முடியுமென்று சிங்கப்பூர் வெளியுறவு மந்திரி திரு. ராஜரத்தினம் இங்கு தெரிவித்துள்ளார்.

நிருபர்கள் மத்தியில் பேசுகையிலேயே இவர் இப்படியாகக் கூறினுர். நேற்று இங்குள்ள கலைத்தொழிற்சாலைகளையும், நவீனயந்திர சாதனங்கள் இணைக்கப்பட்ட பொறியியல் கலைகளையும் பார்வையிட்ட மந்திரி ராஜரத்தினம் கருத்துத் தெரிவிக்கையில், உலகத்திலே தொழில் வளம்மிக்க முக்கிய நாடுகள்போல பாரதமும் தொழில்துறையில் உறுதிவைத்து உயர்ந்த ஒரு ஸ்தானத்தை வகிக்க முடியுமென்றுர்.

## பௌத்ததலைவர்கள் உண்ணுவிரதம்

ஹானேய், செப்.6

அடுத்தவாரம் நடைபெறவிருக்கும் தென்வியட்னும் தேர்தலை எதிர்த்து பௌத்ததலைவர்கள் பலர் உண்ணுவிரதம் மேற்கொள்ளமுடிவு செய்துள்ளனர்.

தேர்தல் ஏற்பாடுகளுக்காக நிறுவப்பட்டிருந்ததேர்தல் சாவடியொன்றை வியட்காங்கியர் நிர்மூலமாக்கியுள்ளனர்.

அந்தச் சாவடியில் இருந்த பொருட்களியாவும் நாசமாகின.

## இலங்கைக்கு உலக வங்கி நிபுணர்கள்

வாஷிங்டன்,செப் 6

இலங்கைக்கு நிதி உதவி அளிப்பது குறித்து ஆராய்வதற்காக வரவிருக்கும் உலகவங்கியின் இரண்டு நிபுணர் குழுவில் முதல் குழு வாஷிங்டனில் இருந்துபுறப்பட்டுவிட்டது.

அக்குழு இலங்கையின் தேவைகள்பற்றி ஆராய்ந்து உலகவங்கிக்கு அறிக்கை சமர்ப்பிக்கும். இலங்கைக்கு உலகவங்கியின் நிதி உதவி இந்த ஆண்டு முடிவுக்குள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# தங்கக் கட்டுப்பாட்டை முற்றாக ரத்து செய்யக்கோரும் தீர்மானம்

## டில்லி சட்டசபையில் தோல்வி

புதுடில்லி, செப். 7

தங்க கட்டுப்பாட்டுச் சட்டத்தை ரத்துச் செய்துவிட வேண்டுமென்று டில்லி சட்டசபையில் எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் வற்புறுத்தினுர்கள்.

தங்க கட்டுப்பாடு சட்டத்தில் செய்யப்படும் மாறுதல்களை பிரதமர் இந்திரா சட்டசபையில் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

தங்கக்கட்டுப்பாட்டுச் சட்டத்தை அடியோடு ரத்துச் செய்ய [illegible] எதிர்க்கட்சியைச் சேர்ந்த அங்கத்தவர் ஒருவர் தீர்மானம் கொண்டுவந்தார்.

"தங்க கட்டுப்பாட்டுச் சட்டத்தை அடியோடு ரத்துச் செய்துவிட வேண்டுமென்ற கோரிக்கை நாடு முழுவதிலும் எழுந்துள்ளது. தங்க கட்டுப்பாட்டுச் சட்டம் கொலை,பாதகச் செயலுக்குச் சமம். இந்தச் சட்டத்தால், நகைத் தொழிலாளர்கள் 250 பேர் தற்கொலையும் செய்துள்ளனர். லட்சக்கணக்கான நகைத் தொழிலாளர்கள் குடும்பம் ஆதரவற்ற நிலையில் தவிக்கின்றன" என்று தீர்மானத்தைக் கொண்டுவந்த பிரகாஸ்வீர் சாஸ்திரி பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், பத்தாயிரத்துக்கு மேற்பட்ட நகைத்தொழிலாளர்கள் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் இந்தச் சட்டத்தால் படிப்பை இழந்தனர் என்றும் சொன்னுர்.

இந்தத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது 24 வாக்குகளும் எதிராக 111 வாக்குகளும் கிடைத்து தீர்மானம் தோல்வி கண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முணிவாக்கு

ஒவ்வொரு பொருளுக்கும் அகமும் புறமும் இருக்கின்றன. எல்லா உண்மைகளையும் ஆத்மாவின் புறத்தோற்றமாகவே இருக்கின்றது. மனிதனின் அந்தரங்க ஆத்மா எவ்வளவு தூரத்துக்கு வெளிப்பட்டிருக்கிறதோ, அவ்வளவு தூரத்துக்குத் தான் புறத்தோற்றங்களுக்கு மதிப்புண்டு.

—மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

EELANADU National Tamil Daily. Post Box 45 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna: Telephone : 539

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஆவணி மீ 23 (8-9-66)


## டாக்டர் வேர்வூட் கொலை

தென்னாபிரிக்கப் பிரதமர் டாக்டர் ஹென்ட்ரிக்வேர்வூட் படுகொலை செய்யப்பட்டார் என்ற செய்தி, அவரது அரசியல் கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் ஏற்றுக் கொள்ளாதவர்களுக்குக்கூட மனவேதனை யளிப்பதாகும். அரசியல்பிரச்னையாயினும் நிறவெறிப் பிரச்னையாயினும் எந்தப் பிரச்னைக்கும் பலாத்காரத்தினால் தீர்வுகாண முடியுமென்ற நோக்கத்தை வளரவிடுவது உலக அமைதிக்கு நல்லதல்ல.

பார்லிமெண்ட் கட்டடத்துக்குள், பேச எழுந்த சமயத்தில் டாக்டர் வேர்வூட் கொல்லப்பட்டிருக்கிறார். வெள்ளையர் ஒருவரே கொலைசெய்ததாக செய்தி வெளிவந்திருப்பது ஆறுதலளிக்கிறது. நிறவெறியின் நிலைக்களனாக விளங்கும் தென்னாபிரிக்காவில் கறு[illegible] ஒருவர் இக்கொலையைச் செய்ததாக வெளிவந்திருந்தால் அதன் விளைவுகளை எண்ணிப்பார்க்கவே முடியாது. டாக்டர் வேர்வூட் நிறவெறிக்கொள்கையை, அகில உலகமே வெறுத்தபோதிலும் விடாப்பிடியாகப் பின்பற்றி, மனிதராகப் பிறந்தும், வெள்ளை நிறத்தவராகப் பிறக்காதவர்களுக்கு இழைத்த கொடுமைகள்கொஞ்சமல்ல. மனித உரிமைகளைக் கேட்ட மக்களுக்குக் கிடைத்தவை அடியும்; உதையும், சிறைவாசமும், சித்திரவதையும்தான். வெறுப்பையும் துவேஷத்தையும் வளர்த்தவர்களுக்கு அவைதான் யமன் என்பதற்கு டாக்டர் வேர்வூட்டின் முடிவு ஓர் உதாரணம்.

எனவே உலகத்தால் வெறுத்து ஒதுக்கப்பட்டு, உள்நாட்டிலும் பகையைத் தேடிக்கொண்ட டாக்டர் வேர்வூட்டின் வாழ்வும் முடிவும் தென்னாபிரிக்க அரசாங்கம் தனது கொள்கையைப் புனராலோசனை செய்து, உலகோடு ஒட்டிவாழக்கூடிய முறையில் மாற்றிக்கொள்வதற்கு சந்தர்ப்பம் அளித்திருக்கிறது, தென்னாபிரிக்காவுக்கு மட்டுமல்ல, அதைப்போல வாழமுடியும் என்ற அசட்டுப்பிடிவாதம் கொண்டிருக்கும் ரொடீஷியாவின் அயன்ஸ்மித்தும் தன் போக்கை மாற்றிக்கொள்ள வேர்வூட்டின் முடிவு ஒரு படிப்பினையாக இருக்கவேண்டும்.

## மதுவிலக்கு யோசனை

1970-ம ஆண்டு முதல் நாடு முழுவதிலும் பூரண மதுவிலக்கு அமுல் செய்யப்பட வேண்டுமென்றும் இப்போது மதுபான விற்பனைக்கு வழங்கப்பட்டுள்ள 'லைசன்ஸ்கள்' தவிர புதிதாக வழங்குவதில்லையென்றும் உள்நாட்டு அமைச்சர் டாக்டர் தகநாயகா அரசாங்கத்துக்கு சிபார்சு செய்துள்ளார்.

இலங்கையில் மதுவிலக்குத் திட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்ற யோசனை இதற்கு முன்னும் பல தடவைகளில் வெளியிடப்பட்டது. தேசிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த சில மாதங்களின்பின் ரயில்களில்மதுபானம் விற்பனை செய்வது தடைசெய்யப்படுமென அறிவிக்கப்பட்டது. பின்னர், இப்பொழுது வழங்கப்பட்டுள்ள 'லைசன்ஸ்' காலாவதியாகும்வரை மதுபான விற்பனை தடைசெய்யப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டது.

ஆனல் இப்பொழுது அமைச்சர் தகநாயகா செய்துள்ள சிபார்சில் புதிய லைசன்ஸ் வழங்கப்படக்கூடாது என்றுதான்தெரிவித்துள்ளாரே தவிர, வழங்கப்பட்ட லைசன்ஸுகள்புதுப்பிக்கப் படக்கூடாது என்று கூறவில்லை.

1970-ம் ஆண்டில் பூரண மதுவிலக்கு அமுல் செய்யப்பட வேண்டுமானுல் இப்பொழுதே அதைப் படிப்படியாக அமுல் செய்யத்தொடங்க வேண்டும். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யும் பொருட்டு உள்நாட்டில் மதுபான உற்பத்திக்கு ஊக்கமளிக்கலாமென அமைச்சர் யோசனைதெரிவித்திருப்பதால் மதுவிலக்கை எதிர்ப்பதற்கு நியாயமில்லை.

மதுவிலக்கை அமுல் நடத்துவதற்கு அரசாங்கம் மட்டுமல்ல பொது ஸ்தாபனங்களும் தீவிர பிரசார இயக்கத்தை ஆரம்பிப்பது நல்லது.

## ஐயாறன் எழுதுவது

வேலணை கிழக்கிலே சில நாட்களுக்கு முன் ஒரு பெரிய மாம்பழம் பிரசாதமாகக் கிடைத்தது. திருவிளையாடல் படத்திலே முருகன் ஒரு சிறிய மாம்பழத்துக்காகக் கோபித்துக் கொண்டு மலைமீது ஆண்டியானதைப் பார்த்த காட்சி நினைப்புவந்தது. அந்தப் பழத்தைவிட இரண்டு மடங்கு பெரியது. எவ்வித பந்தயத்திலும் ஈடுபடாமல் கிடைத்ததைப்பற்றி மனம் ஏதேதோ நினைத்தது.

(பழநிமலை அடிவாரத்திலே திருவாவினன்குடிக் கோவில் உண்டு. அங்கு சுவர்களில் கந்தபுராணக் காட்சிகளை அழகுச் சித்திரமாக எழுதியுள்ளதைப் பார்த்தீர்களா? சமீபத்தில் அச்சித்திரங்களைப் பார்த்தேன். சிவபெருமான் பந்தயமாக வைத்தது ஒரு மாதுளம்பழமே என்று எழுதியிருந்ததைக் கண்டேன். பொதுவாக எங்கும் மாம்பழம் தான் பந்தயத்துக்குவைக்கப்பட்டதென்று கூறப்படுகிறது. மாம்பழத் திருவிழாவும் நல்லூர், மாவிட்டபுரம் முதலிய இடங்களில் நடப்பதைப் பார்க்கிறோம். ஆனுல் பழநிமலைக்குப் பக்கத்திலுள்ள திருவாவினன்குடி கோவில் சித்திரம் தவருக இருக்குமா? இப்படிப் பல எண்ணங்கள் என் மனதில் எழுந்தன. நீங்கள் அடுத்தமுறை பழநி செல்லுகையில் அந்த மாதுளம்பழச் சித்திரத்தைப் பாருங்கள்)

ஃ ஃ ஃ

வேலணை மாம்பழத்தை வெட்டிப் பார்த்தபோது சிறிது நாருமில்லை. 'ஹல்வா' போல் கரைந்துவிட்டது. தோலும்கூட ருசியாக இருந்தது. இது என்ன பழம் என்று விசாரித்ததில், மல்கோவா என்று ஒரன்பர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலே தீவுப் பகுதியிலே இவ்வளவு அருமையான மாங்கனியைத் தரும் மண்ணைப் பற்றி எனக்குப் புதுமதிப்பு ஏற்பட்டது. வேலணை மக்கள் நிச்சயம் இதைப் பற்றிப் பெருமைகொள்ள நியாயமுண்டு. யாழ்ப்பாணம் வானம் பார்த்த பூமியாக இருக்கலாம். என்றாலும் இங்கு விளையும் காய்கனிகளுக்கு விசேஷ ருசி. புஷ்பங்களுக்கு நல்ல மணம். இங்குள்ள பூமியை நன்கு பயன்படுத்துவதாயின் நம் உணவுக்குப் பிறர்கையை எதிர்பார்க்கத் தேவையா?

ஃ ஃ ஃ

கண்டியிலிருந்து வந்த ஒரன்பர் அங்கு காய்கறிகள் செழிப்பாக விளைந்தாலும், அவை ருசியில்லாமல் இருப்பதாயும், யாழ்ப்பாணக் காய்கறிகள் மிக ருசியென்றும், இந்த மண்ணைப் புகழ்ந்தபோது மிக மகிழ்ச்சியாகவும் பெருமையாகவுமிருந்தது.

ஃ ஃ ஃ

மறந்தேவிட்டேன். வேலணைக்கு ஏன் சென்றேன் தெரியுமா? அங்கு முத்துமாரியம்மன் கோவிலுக்கு எதிரேயுள்ள மடத்திலே நால்வர், நடராஜமூர்த்தி இவர்கள் விக்கிரகப் பிரதிஷ்டை சில நாட்களுக்கு முன்பாக நடந்தது. அந்த மடத்தைக் கட்டிய ஸ்ரீ செல்லப்பா சுவாமிதான், திருக்கேதீச்சரத் திருப்பணி வேலையை ஆரம்பித்து, பல்லாண்டுகள் நடத்தியவர். திருப்பணியைப் பற்றி கொழும்பு முதலிய இடங்களில் பிரசாரம் செய்து ஆதரவுதேடி, பல பிரமுகர்களை இதில்ஈடுபடுத்தினர். பின்னர் காசிக்குச் சென்று பல்லாண்டுகள் வசித்து,சிவலிங்கம்கொணர்ந்து வேலணை மடத்தில் பிரதிஷ்டை செய்தார். இப்போது அழகான இப் புதிய விக்கிரகங்களை அம்மடத்தில் பிரதிஷ்டை செய்து வேலணையிலே சைவ சமூகத்துக்கு மேலான தொண்டு செய்துள்ளார்.

அந்தஅழகான விக்கிரகங்களை ஈழத்திலுள்ள கலைஞர் தான் சுமார் 70 நாட்களில் வார்த்தாராம்வேலணையிலே இதுவரை நால்வர் விக்கிரகங்களே இல்லைஎன்றுஅறிந்தேன். நால்வரும் நடராஜப் பெருமானும்வந்துவிட்டால்,வேலணைசைவ மக்களுக்கு இனி புதுபலமும் நல்வாழ்வும் ஏற்படுமென்பது திண்ணம். வேலணைக்கு இவ்வித மேலான கைங்கரியம் செய்த பெரியாரும், அவருக்கு உதவியவர்களும் வாழ்க!

ஃ ஃ ஃ

வடிவுந் தனமும் மனமுங் குணமும்
குடியுங் குலமுங் குடிபோகியவா!
அடியந்தமிலா வயில்வேலரசே!
மிடியென்றொரு பாவி வெளிப்படினே.

—அருணகிரியார்

# தென்னுபிரிக்க பிரதமரின் முடிவு நிறவெறியையும் ஒழிக்குமா?

தென்னுபிரிக்கப் பிரதமர் டாக்டர் ஹென்ட்ரிக் வேர்வூட் பார்லிமெண்டில் பேசஎழுந்த சமயம், பார்லிமெண்டில் பணி புரியும் ஒரு வெள்ளைக்காரரால் குத்திக் கொலைசெய்யப்பட்டார். இச்சம்பவம் நேற்று முன்தினம் நிகழ்ந்திருக்கிறது.

தென்னுபிரிக்காவைப் பற்றி சிறுபிள்ளை கூடத் தெரிந்திருக்குமளவுக்கு அதன் நிறவெறிக்கொள்கை அதைப் பிரபல்யப் படுத்தியிருக்கிறது. வேர்வூட் பிரதமராவதற்கு முன்னர் டாக்டர் மலான் பிரதமராக இருந்தார். அவரும் நிறவெறிக்கொள்கைக்குப் பெயர்பெற்றவர். அவருக்குப்பின் பிரதமரான டாக்டர் வேர்வூட், டாக்டர் மலானையும் நிறவெறிக் கொள்கையில் மிஞ்சிவிட்டார். உலகநாடுகளின் விரோதத்தை நிறவெறிக் கொள்கை காரணமாகச் சம்பாதித்துக் கொண்ட டாக்டர் வேர்வூட் உள்நாட்டிலும் தனது நடவடிக்கைகள் காரணமாகப் பகையைத் தேடிக்கொண்டார். இதற்கு முன்னரும் அவரைக்கொலைசெய்வதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. துப்பாக்கிச் சூட்டினுல் கண்களில் காயமடைந்ததுடன் அவர் உயிர்பிழைத்தார்.

காமன்வெல்த்திலிருந்தும் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் போன்ற மற்றும் உலக ஸ்தாபனங்களிலிருந்தும் தென்னுபிரிக்கா வெளியேறுவதற்கு டாக்டர் வேர்வூட்டின் நட நடவடிக்கைகளும் நிறவெறிக்கொள்கையில் அவர் கொண்டிருந்த திமிரும் தான் காரணமாகஇருந்தன.

1910-ம் ஆண்டு பிரிட்டனிடமிருந்து விடுதலைபெற்ற தென்னுபிரிக்கா 1961-ம் ஆண்டு மே மாதம் 31-ந் திகதிகுடியரசானது. கொலரெட்ஸ், [illegible]டுஸ் என அழைக்கப்படும் கலப்பு இனத்தவரான ஆபிரிக்கரும் இந்தியரும் வாழும் தென்னுபிரிக்காவில் வெள்ளையருக்கு மட்டுமே சிவில் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. நீர்வளம், நிலவளம் நிறைந்த தென்னுபிரிக்கா தங்கம் விளையும் பூமியுமாகும்.

டாக்டர்வெர்வூட் கொலை செய்யப்பட்டுவிட்டார்.அவருடன் தென்னுபிரிக்காவின் நிறவெறிக் கொள்கையும் மடிந்துவிடுமா?

(5-ம் பக்கம் பார்க்க)

## புதியமுறைப் போராட்டம்

தொழிலாளர் போராட்டம் உலகில் எங்கும் நடைபெறுவதுதான். போராட்டங்கள் மூலம் தொழிலாளர் தமது உரிமைகளை முழுவதுமாகப் பெருவிட்டாலும் நியாயமான கோரிக்கைகளில் வெற்றி பெறுகிருர்கள் என்பது உண்மையே. ஆனுல் நாட்டுக்கு நாடு போராட்ட முறைகளில் சில சமயங்களில் வேறுபடுகிறது. சில நாடுகளில் தொழிலாளர் கடைப்பிடிக்கும் போராட்ட முறை அவர்களுக்கும் அவர்கள் நாட்டுக்கும் நன்மை செய்கிறது. இதை இதரநாடுகளின் தொழிலாளர்களும் பின்பற்றுவது நல்லது.

தொழிலாளர் போராட்டம் என்றதும் வேலைநிறுத்தம் என்று கருதுமளவுக்கு இலங்கையில் எடுத்ததற்கெல்லாம் வேலைநிறுத்தம் செய்யும் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. வேலைநிறுத்தங்கள் பல தோல்வியிலும் முடிவடைந்திருக்கின்றன. வேலைநிறுத்தத்தினுல் முதலாளியும் அரசாங்கமும், நாடும் பாதிக்கப்படுவதுடன் தொழிலாளியே பெரிதும் பாதிக்கப்படுகிருர்.

தமிழ் நாட்டில் அரசாங்கத்திற்குச் சொந்தமான மாதவரம் ஆலை காலனியில் 'யூனிபாரம்' கோரி தொழிலாளர் புதியமுறைப் போராட்டம் நடத்துகிருர்கள். அவர்கள் கோவணங் கட்டிக் கொண்டு வேலை செய்கின்றனர். பாகிஸ்தானில் சில தினங்களுக்கு முன் சில தொழிலாளர் மேல்சட்டை அணியாது ஒரு போராட்டத்தை நடத்தினர். இவர்கள் கோரிக்கையை அரசாங்கம் பரிசிலனை செய்கிறது.

இவ்வித போராட்டத்தினுல் அரசாங்கத்துக்கோ, முதலாளிக்கோ, தொழிலாளிக்கோ, நாட்டுக்கோ நஷ்டமில்லை. கோரிக்கையிலும் வெற்றி கிடைக்கும். இதர நாட்டுத் தொழிலாளரும், யாருக்கும் தீங்கு செய்யாத இவ்வித புதிய போராட்ட முறையைப் பின்பற்றுவது நல்லது.

# கண்ணன் பிறந்தான்

நேற்று கிருஷ்ணஜயந்தி. கிருஷ்ணன் கோவில்களில் நேற்றிரவு கிருஷ்ண ஜயந்தி கொண்டாடப் பெற்றது. வண்ணை ஸ்ரீ வேங்கடேசவரதராஜப்பெருமாள் கோவிலில் கிருஷ்ண ஜயந்திகொண்டாடப்பட்டது. இன்று மாலை உறியடித்திருவிழா நடைபெறுகிறது.

### கண்ணன்வரவு

பல்லவி

வருவாய், வருவாய்,
வருவாய்-கண்ணு!
வருவாய், வருவாய், வருவாய்!

சரணங்கள்

உருவாய் அறிவில் ஒளிர்வாய்-கண்ணு!
உயிரின் னமுதாய்ப் பொழிவாய்-கண்ணு!
கருவாய்என்னுள்வளர்வாய் கண்ணு!
கமலத்திருவோடிணை வாய்-கண்ணு!
இணைவாய் எனதா வியிலே கண்ணு!
இதயத்தினிலே யமர்வாய்-கண்ணு!
கணைவா யசுரர் தலைகள்-
சிதறக் கடையூ ழியிலே
படையோடெழுவாய்
எழுவாய் கடல்மீதினிலே
-எழுமோர்
இரவிக் கிணையா உளமீதினிலே
தொழுவேன் சிலனும்
நினையே-கண்ணு!
துணையே, அமரர் தொழும்
வானவனே!

—பாரதியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுத்தப்பட்ட சம்பள உயர்வு கிடைக்கும்

## திறைசேரி பரிசீலனை

யாழ்ப்பாணம், வெள்ளி
சிங்களத் தேர்ச்சி காரணமாக நிறுத்திவைக்கப்பட்ட வருடாந்த உயர்ச்சிப் பணம் அகில இலங்கை ரீதியாக புதிய சிறுசேவையாளர்களுக்கு வழங்கப்படவிருக்கிறது. இப்பிரச்னை சம்பந்தமாக தற்பொழுது திறைசேரி பரிசீலனை செய்துவருகிறது.

தேசிய அரசாங்க சுகாதார சேவைத்தொழிலாளர் சங்கம் இவ்விஷயமாக இவ்வருடம் ஜுலை மாதம் 30-ம் திகதி, சுகாதார மந்திரிக்கு முறையீடு செய்திருந்தது.

சுகாதார மந்திரி யாழ்ப்பாணம் வந்திருந்தபொழுது புதிய சிறு சேவையாளர்களுக்கு வருடாந்த உயர்ச்சிப்பணம் வழங்குமாறு, சுகாதார அதிபருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இவ்விஷயம் திறைசேரியின் கவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக, தேசிய அரசாங்க சுகாதார சேவை தொழிலாளர் சங்கத்திற்கு தற்பொழுது தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய அரசாங்க சுகாதார சேவை தொழிலாளர் சங்கத்தின் விசேஷ நிர்வாகசபைக் கூட்டத்தில், வருடாந்த உயர்ச்சிப்பணம் சம்பந்தமாக நேரடியாக திறைசேரியுடன் தொடர்பு கொள்வதாகவும், ஆட்சேபக்கூட்டங்கள் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## அரசாங்கத்தின் நோக்கம் நிறைவேறவில்லையே!

### எம். பி. மூலம் நடவடிக்கை எடுக்க ப. நோ. கூ. சங்கம் தீர்மானம்

யாழ்ப்பாணம், வியா.
"எங்கள் சங்க அங்கத்தவர்கள் கமங்கள், நீர்ப்பாய்ச்சலின்மையால், அதிக கஷ்டப்படுவதாலும், இது காரணமாகப் பல அங்கத்தவர்கள் கமங்களைத் தொடர்ந்து செய்யாது விட்டிருப்பதால், அரசாங்கம் காணி கொடுத்ததன் நோக்கம் நிறைவேறாமல் இருப்பதாலும், நீர்ப்பாய்ச்சலுதவி உடனே செய்து தரும்படி பாராளுமன்ற உறுப்பினர் மூலம் இதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும்''

கண்டாவளை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் 10-வது வருடாந்தக் கூட்டத்தில், மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது. இக்கூட்டம் திரு. எஸ். மயில்வாகனம் தலைமையில், சங்க காரியாலயத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கூட்டுறவு பரிசோதகர்களும் சமூகமளித்தனர்.

தலைவர் பேசும் போது, கண்டாவளை பகுதியில், நெற்செய்கைக்கு நல்ல நிலமிருப்பதாகவும், தண்ணீர் வசதியிருந்தால், இலங்கையிலேயே கூடுதலாய் நெற்பயிர் உற்பத்தி செய்ய முடியுமென்றும் கூறினார்.

எல்லாக் கடிதங்களும், புத்தகங்கள் முதலிய எல்லா விஷயங்களும், சங்கத்தில் தமிழில் நடைபெறவேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. வி. நடேசலிங்கம், உப தலைவர்: திரு. ஈ. சபாலிங்கம், காரியதரிசி: திரு. அ. கந்தையா.

## 'நல்ல சமுதாயத்தை பெண்கள் சிருஷ்டிக்கலாம்'

யாழ்ப்பாணம், வியாழன்
''பெண்களால் ஒரு சமுதாயத்தை அழிக்கவோ, ஆக்கவோ முடியும். பொருளாதாரம், சுகாதாரம், லட்சிய வாழ்வு இவற்றிற்கு உறுதுணையாக நின்று ஒரு நல்ல சமுதாயத்தை பெண்களால் தான் சிருஷ்டிக்க முடியும்''.

புன்னாலைக்கட்டுவன் வடக்கு சனசமூகநிலைய வருடாந்த விழாவில் பண்டிதை திருமதி சத்தியதேவி துரைசிங்கம் பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார்.

ஏழாலை கிராமசபைத் தலைவர் திரு. க. சிவகுரு விழாவுக்குத் தலைமை வகித்தார்.

இன்று உலக அரங்கிலே முக்கிய பதவிகள் பெண்கள் வகிக்கிறார்கள் என்றும், இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி அதற்கொரு உதாரணமாகவிளங்குகிறாரென்றும் திருமதி சத்தியதேவி துரைசிங்கம் மேலும் பேசுகையில் கூறினார்.

வலிவடக்கு காரியாதிகாரி திரு. தி. முருகேசம்பிள்ளை பேசுகையில், விவசாயிகள் பொருளாதார அபிவிருத்திக்கேற்ற பயிர்களை தெரிந்து பயிரிடவேண்டுமென்றும், கட்டுக்குளம் நீர்ப்பாய்ச்சல் திட்டத்துக்குரிய ஆக்கவேலைகளில் அரசாங்கம் செலுத்தும் கவனம் பாராட்டுக்குரியதென்றும் கூறினார்.

திரு. கனக செந்திநாதன் பேசுகையில், உழைக்காமல் சோம்பேறியாக இருந்து உண்பதுபாவங்களில் பெரிய பாவம் என்று கூறினார். மற்றும் பலரும் பேசினர்.

இசைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

ஆசிரியருக்குக் கடிதம்

## காந்திஜிபுறக்கணிக்கப்படுகிறார்!

உலக உத்தமர் காந்திஜி பருத்தித்துறையில் புறக்கணிக்கப்படுகிறார். அறிவுத்திலமாக வாழ்ந்து இப்போது மறைந்தும் மறையாமல் வாழ்ந்துகொண்டிருக்கும் மேதை காந்தி அடிகளாருக்கு சிலை எடுத்த பருத்தித்துறையில் இப்படி நடக்கிறது. பருத்தித்துறை பகுதி மக்கள் இதனைப் பார்த்து வேதனையால் கண்ணீர் வடிக்கிறார்கள்.

பருத்தித்துறை நகரத்தின் வடக்குமூலையில் அமைந்திருக்கும் காந்திஜியின் உருவச்சிலை கடந்த சில மாதங்களாக ஒளியிழந்து, பலவிதமான பறவைகளின் அபிஷேகங்களுக்கும் இலக்காகி, யாருமே கவனிப்பாரற்றுக் கிடக்கிறது.

முன்னர் அந்தச் சிலைக்கு ஒளி கொடுத்துக்கொண்டிருந்த மின்சாரதீபம் இப்போதில்லை. பருத்தித்துறை நகரசபையினர் உலகஉத்தமரின் சிலை நிமிர்ந்து ஒளியுடன் திகழ உடனடியாக ஆவனசெய்ய வேண்டுமென்பதே பருத்தித்துறைப்பகுதி மக்களின் கோரிக்கை.

இ. குண[illegible]
பருத்தித்துறை.

## மோசடி செய்ததாக வழக்கு

யாழ்ப்பாணம், புதன்
தபால்தந்தி பகுதியைச் சேர்ந்த ஜுசை சேவியர் என்பவர், காங்கேசன்துறை வீதியைச் சேர்ந்த கே. நல்லையா என்பவரை, 62-ம் ஆண்டு, நவம்பர் மாதம் மோசடிசெய்ய முயற்சித்ததாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு நேற்றுக்காலையாழ்ப்பாணம் பதில் மாஜிஸ்டிரேட் திரு. வி. நவரத்தினராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கின் சாட்சியாகவுள்ள மகாலிங்கம் என்பவரின் இருப்பிடத்தை அறிய முடியவில்லையென்றும் அவருக்கு கட்டளை வழங்கப்படவில்லையென்றும் பொலிசார் தெரிவித்தனர்.

எதிரி சார்பில் புறக்டர் எஸ். அமிர்தலிங்கம் ஆஜரானார். பதில்மாஜிஸ்டிரேட் இவ்வழக்கு விசாரணையை நவம்பர் 15-ம் திகதிக்கு பின்போட்டார்.

## இன்னும் முடிவில்லை

கொழும்பு, புதன்
கூட்டுக்கட்சியைச்சேர்ந்தவர்கள் பலாங்கொட, பெந்தர, எல்பிட்டியா தொகுதிகளில் உபதேர்தலில் போட்டியிடுவது பற்றி இதுவரை எவ்வித முடிவும் செய்யப்படவில்லை.

பண்டாரவளைத்தொகுதியின் உபதேர்தலில் ஸ்ரீ லங்காசுதந்திரக்கட்சி கிராம சபைத் தலைவரான திரு. ஆர்.எம். அப்புகாமியை நிறுத்துவதென முடிவு செய்துள்ளது.

## காங்கேசன்துறை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்கப்பலிலிருந்து இன்று 1001 தொன் அரிசியை இறக்கி யாழ்.மாவட்ட துறைமுக சேவை தொழிலாளர் சமாசத்தினர் புதியசாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளனர். இரண்டுஅந்தர் நிறையுள்ள மூடைகளில் 1001 தொன் மூடைகளை ஒரே நாளில் இறக்குமதிசெய்தது இதுவே முதல்தடவையாகும்.

## தென்னாபிரிக்கா...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

புதிய பிரதமராக வருபவரும் நிறவெறிக்கொள்கையையே பின்பற்றுவாரா? என்ற கேள்விகள் தென்னாபிரிக்காவிலும் உலகநாடுகளிலும் எழுந்துள்ளன.

1958-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3-ந் திகதி பிரதமராகப் பதவியேற்ற டாக்டர் வேர்வூட் 1956-ம் ஆண்டில் தென்னாபிரிக்க அரசாங்கத்தில் உள்நாட்டு விவகார அமைச்சராகச் சேர்ந்தார். ஆறடி உயரமான டாக்டர் வேர்வூட் 1927-ம் ஆண்டில் செல்வி எலிஸபெத்ஷும்பி என்னும் பெண்ணை மணம்செய்தார். ஐந்து ஆண்பிள்ளைகளுக்கும் இரண்டு பெண்பிள்ளைகளுக்கும் தந்தையான டாக்டர் வேர்வூர்ட்டுக்கு இப்பொ[illegible]

—எம். ஜி

## "கிராம முன்னேற்றத்துக்கு மக்கள் ஐக்கியம் அவசியம்"

— கல்விமந்திரி

குருநாகலை, புதன்
அரசியல் கருத்துவேற்றுமைகளை மறந்து, சகல இன மக்களும் கிராமங்களின் முன்னேற்றத்துக்காக ஒற்றுமையாக இருக்கவேண்டுமென கல்வி கலாச்சார மந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை தெரிவித்துள்ளார்.

குளியாப்பிட்டியிலுள்ள கும்பகில்லா வைத்தியசாலை திறப்புவிழாவில் பேசுகையிலேயே மந்திரி இரியகொல்லை மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

ஒரு கிராமத்தின் வளர்ச்சியும், முற்னேற்றமும் அந்தப் பகுதி மக்களின் ஒற்றுமையிலேயே தங்கியுள்ளது கிராம மக்கள் தம்மிடையே இருக்கும் வேற்றுமைகளை மறந்து, இணைந்து செயலாற்ற வேண்டும். தேசிய அரசாங்கம் சகல இன மக்களையும் பாரபட்சமற்ற முறையில் தேசிய ஒற்றுமையை வளர்ப்பதையே தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த நாட்டின் நிர்வாகத்தைக்கொண்டு நடத்துவதற்கு தேசிய அரசாங்கத்துக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. நிச்சயமாக இன்னும் ஒரிருவருடங்களில் தேசிய அரசாங்கம் நாட்டை ஒளிமயமாக்கும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.



## தமிழ்மன்றச் செயலாளராகத் தெரிவு

அண்ணாமலைநகர், செப். 7
அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கீழைத்துறையில் கல்வி பயிலும் ஈழத்துச் சிவானந்தன் இவ்வாண்டு தமிழ்மன்றத்தின் செயலாளராகத் தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார். பல ஆண்டுகளுக்குப் பிறகு இப்பதவியை வகிக்கும் முதல் இலங்கையர் இவரே. புங்குடுதீவைத் தாயமாகக் கொண்ட திரு. சிவானந்தன் பேச்சாளரும், நடிகரும், எழுத்தாளருமாவார்.

## வர்த்தக மந்திரியின் புதிய திட்டம்

கொழும்பு, புதன்
தனியார்துறையுடன் அரசாங்கமும் சேர்ந்து வியாபார சம்பந்தமான துறைகளில் ஈடுபடவிருப்பதாகத் தெரியவருகிறது. வியாபாரநோக்கங்களுக்காக நிறுவப்படும் கூட்டுஸ்தாபனங்களில் பொது மக்களும் பங்குகள் பெறுவதற்கு இப் புதிய முறை வழிவகைசெய்யும்.

இத் திட்டத்தை செயற்படுத்தும்பொருட்டு வர்த்தக மந்திரி டாக்டர் எம். வி. பி. பீரிஸ் கூட்டுறவு சட்டவிதிகளுக்கான திருத்தங்களை மேற்கொண்டுள்ளார். இத் திருத்தங்கள் பாராளுமன்றத்தில் அங்கீகாரம்பெற்றதும் கூ. மொ. வி. ஸ்தாபனம் பல பிரிவுகளாக்கப்படும் எனத் தெரியவருகிறது.

## ரூபா 20 அபராதம்

யாழ்ப்பாணம், புதன்
பொலீஸாரைக்கண்டதும் கள்ளுக்கொட்டில் சொந்தக்காரரான எனது மருமகன் ஓடிவிட்டார், கொட்டிலில் இருந்த என்னைப் பொலிஸார் பிடித்துக்கொண்டனர் என்று 12 போத்தல் கள்ளு வைத்திருந்ததாக தொடரப்பட்ட வழக்கில், எதிரி பண்டாரி இரத்தினம் கூறினார்.

இவ்வழக்கு நேற்றுக்காலை யாழ்ப்பாணம்பதில் மாஜிஸ்திரேட் திரு. வி. நவரத்தினராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிர்தரப்பில்புறக்டர் எஸ். அமிர்தலிங்கம் ஆஜரானார்.

இவ்வழக்கில், கோண்டாவில் குலையடியைச் சேர்ந்த பண்டாரி இரத்தினம் 12 போத்தல் கள்ளுவைத்திருந்ததாக, கோப்பாய் பொலிஸார் வழக்குத்தாக்கல் செய்திருந்தனர்.

விசாரணையின்பின், பதில் மாஜிஸ்திரேட் எதிரிக்கு 20 ரூபா அபராதம் விதித்தார்.

## சுகாதாரமந்திரிக்கு பாராட்டு

கொழும்பு, புதன்
தேசியஅரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னர் நாட்டில் தேசியஒற்றுமையும் அமைதியும் நிலவுகிறது. பல்சமூகத்தவர்களைக் கொண்ட இச்சங்கம் இந்த நோக்கிற்காக உழைக்க வேண்டும், என்று அரசாங்க அப்போதிக்கரிமார்களின் நாற்பத்துமூன்றுவது ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்குத் தலைமைவகித்து பேசியதிரு. வி.கணேசையா தனது தலைமையுரையில் குறிப்பிட்டார். கூட்டம் கொழும்பு வைத்திய கல்லூரி மண்டபத்தில்நடைபெற்றது.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:
சுகாதாரமந்திரி திரு எம் டி. எச். ஜெயவர்த்தனாவும் திருமதி விமலாகன்னங்கராவும் எங்கள் கஷ்டங்களை உணர்ந்து தகுந்தமுறையில் குறைபாடுகளை நிவர்த்தி செய்துள்ளார்கள். இன்னும் பல பிரச்னைகள் எங்களை எதிர் நோக்கியுள்ளன. இவைகளையெல்லாம் நியமிக்கப்படவிருக்கும் சபை மேற்கொண்டு பூரணமாகத் தீர்த்துவைக்கவேண்டும்.

## கலா படிப்பக புதிய நிர்வாகிகள்

உடுப்பிட்டி, புதன்
கரணவாய் தெற்கு கலா படிப்பகமன்ற வருடாந்தக் கூட்டம் திரு. ஐ. சிவகுரு தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர் :- திரு. எம். எஸ். ஜேசுதாசன்; தலைவர் ஐ.சிவகுரு; உப- தலைவர்:- ஆசிரியர் திரு. எஸ். செல்வநாயகம்; செயலாளர்:- திரு ஜே ஜெயக்குமார்; உப- செயலாளர்:- திரு. சு. குகராசன்; பொருளாளர்:- திரு. பாலசுப்பிரமணியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் வயல்

## பூமி உருண்டையாகவா இருக்கின்றது?

உலகம் உருண்டையாகவா இருக்கிறது? 'ஆம்' என்று சொன்னதற்காக கலிலியோ என்ற அறிஞர் சித்திரவதைக்குள்ளானார். உலகம் தட்டையாக இருக்கிறதென்று எண்ணிக்கொண்டிருந்த மக்களுக்கு அது உருண்டையாக இருக்கிறது என்று கலிலியோ கூறியதும் கோபம் வந்துவிட்டது. எத்தனையோ உதாரணங்களைக் காட்டி விளக்கியும்கூட அந்த அறிஞரின் சொல்லை யாருமே கேட்கவில்லை. காலப்போக்கில் அது உருண்டைதான் என்று ஒப்புக்கொண்டார்கள். பள்ளிக்கூடங்களிலெல்லாம் பூகோளம் என்று உருண்டையொன்றை உலகம் இப்படித்தான் இருக்கிறது என்று காட்டுகிறார்கள். தோடம்பழம்போல உருண்டையாக இருக்கிறதென்று ஆசிரியர்கள் படிப்பிக்கிறார்கள்.

ஆனால் இப்போது பூமியின் தோற்றத்தைப்பற்றி விஞ்ஞானிகள் வேறுவிதமாக கருத்துக் கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். பூமி தட்டையாகஇல்லை என்பது உண்மைதான். ஆனால் தோடம்பழத்தைப் போல ஒரே உருண்டையாக இல்லையாம்.

சில பகுதிகளில் உயர்ந்தும் நீண்டும் இருப்பதாக இப்போது கருதப்படுகின்றது. குறிப்பாக இந்தோனேஷிய நாடுகள் இருக்கும் பகுதியில் பூமி சற்று உப்பிக்கொண்டு இருப்பதாக இப்போது ஆதாரம் கிடைத்திருக்கிறது.

இதற்கெல்லாம் காரணம் விண்வெளிக்கு அனுப்பப்பட்ட செயற்கைக் கிரகங்கள் தான். செயற்கைக் கிரகங்கள் விண்வெளியிலிருந்து பூமியைப் படம்பிடித்துள்ளன. இந்தப்படங்களை இப்போது ரஷ்ய விஞ்ஞானிகளும் அமெரிக்க விஞ்ஞானிகளும் தனித்தனியே ஆராய்கிறார்கள். இன்னும் சில காலத்தில் பூமியின் தோற்றம் பற்றிய முழுவிபரமும் வெளிவரும்.

—பேனு

## பெண்கள் இட்ட சாபம்......!

பிரிட்டனில் ஒரு கிராமம். அந்தக் கிராமத்துக்கு ''பெக்ஸ்டன்'' என்று பெயர். சுமார் முன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் இந்த கிராமத்தில் ஆங்கிலேயர்கள் பெருவாரியாக வாழ்ந்துவந்தார்கள். ஆனால் இப்போது அந்தக் கிராமம் வெறிச்சோடி கிடக்கின்றது. கட்டிடங்களும், வீடுகளும், தேவாலயங்களும் காலியாகக் கிடக்கின்றன. மனிதர்களுக்குப் பதில் அந்தக் கட்டிடங்களில் வவ்வாலும், கோட்டானும் குடிபுகுந்துள்ளன. கடைசியாக அந்தக்கிராமத்தில்ஒரு கொட்டிலில்வசித்து வந்த ஆசாமியும்அண்மையில் வெளியேறிவிட்டார்! இப்படி இந்தக் கிராமம் பாழடைந்து போவதற்கு அங்கு ஒரு காலத்தில் வாழ்ந்த நான்கு பெண்கள் இட்ட சாபம் தான் காரணமென்று சொல்லப்படுகின்றது.

1616-ம் ஆண்டு 'செண்டன்' என்ற ஊரில் 4 பெண்கள் வசித்துவந்தனர். அவர்களின் உறவினர் ஒருவர் செம்மறி ஆடுகளைத் திருடியதாகக் கண்டுபிடிக்கப்பட்டார். அவரை விசாரணை செய்த சோ. அகஸ்டின் நிக்கலொஸ் என்பவர் மரணதண்டனை விதித்தார். இதைக் கேள்வியுற்ற அந்த நான்கு பெண்களும் நீதிபதியின் பிறந்த ஊர் நாசமாகட்டும் என்று சாபம் இட்டனர். துரதிஷ்டவசமாக அந்த நீதிபதியின் பிறந்த ஊர் 'பெக்ஸ்டன்' கிராமமாக இருந்துவிட்டது.

இந்தச் சாபம் தான் காரணமோ இல்லையோ பெக்ஸ்டன் கிராமம் ஒரு போதுமே முன்னேற்றமடையவில்லை. நீதிபதிசேர் அகஸ்டினின் வாரிசாக இருந்தவர் கடல் பிரயாணத்தின்போது கடத்திப் போகப்பட்டார். அகஸ்டின் இறந்த பிறகு பெக்ஸ்டன் கிராமத்தில் மேம்பாட்டைக் கவனிப்பதற்கான பிரபு எவனும் இருக்கவுமில்லை. சில ஆண்டுகளின்பின் லண்டன் நகரில் பரவிய தொற்று நோய் ஒன்று அந்தக் கிராமத்தையும் உலுக்கி எடுத்தது. அதன் பிறகு ஏற்பட்ட உள்நாட்டுப் போர் ஒன்றில் நூற்றுக்கணக்கானவர்கள் மடிந்தார்கள். 1831-ம் ஆண்டில் அந்தக் கிராமத்தில் சனத்தொகை 103 ஆக இருந்தது. 1931-ம் ஆண்டில் 13 ஆக குறைந்தது. பின்னர் ஏற்பட்ட உலக யுத்தத்தின்போது இந்தக் கிராமத்தில் சிப்பாய்கள் துப்பாக்கி பயிற்சி செய்ய ஆரம்பித்தார்கள். அதனால் சனங்களில் பலர் வெளியேறினர்கள். 1949-ம் ஆண்டில் அதன் ஜனத்தொகை 9 ஆகக் குறைந்தது. கடைசியாக ஒரு கொட்டிலில் ஒரு தனி மனுஷி வாழ்ந்துவந்தாள். அவளும் இப்போது வெளியேறிவிட்டாள். இப்போது அந்தக் கிராமம் ஜனசஞ்சாரம் அற்று பேய்கள் உறையும் பாழடைந்த கிராமமாகக் காட்சியளிக்கின்றது.

ஒரு காலத்தில் சீரும் சிறப்புமாக விளங்கிய அந்த அழகிய கிராமம் சீர்குலைந்து போனதற்கு அந்த நான்கு பெண்மணிகளும் தங்களின் திருவாய்களினால் இட்ட அனுமந்த சாபம் தான் காரணமாம். என்ன பயங்கரம்! எல்லா பெண்களுக்கும் இந்த சக்தி இருந்துவிட்டால்.........அம்மோய்............[illegible] பார்க்கவும் முடி[illegible] பு ஸ்டொப்.

## பரீட்சைக்குப் படிக்கிறீர்களா? இதோ சில யோசனைகள்:-

— 2 —

கோடரியை எடுத்து ஒரே ஒரு வெட்டுவெட்டியவுடன் மரம் கீழேசாய்ந்து விடுவதில்லை! அதுபோலவே எந்தப்பாடத்தையும் வெறுமனே ஒருதடவை பார்த்துவிட்டால் அல்லது படித்துவிட்டால் போதுமென்று கருதிவிடக்கூடாது.

### திட்டம்தேவை

மரம் எந்தப்பக்கம் விழக்கூடியதாக வெட்டவேண்டும். அடியில்வெட்டி மரத்தைமுழுதாகவிழச் செய்வதா அல்லது கிளைகளை முதலில் தறித்து பின்னர் நுனியிலிருந்து சிறிதுசிறிதாக துண்டுபோட்டு வெட்டுவதா. அதுவுமில்லையெனில் அடியில் பட்டையைஉரித்துவிட்டு மரத்தைக்காயவிட்டு தானே இற்று விழும்படி செய்வதா என்பதையெல்லாம் மரம்வெட்டுவதின் நுணிக்கம் தெரிந்த தொழிலாளி ஆராய்கிறான் அது போல் படிப்பில் படிப்படியாகமுன்னேறி வெற்றி பெற நினைக்கும் புத்திசாலி மாணவனும் திட்டம் போடுகிறான்.

முக்கியமாகப் படிப்பை பற்றிக் கொள்ளவேண்டும். அந்தப்பற்றுதல் தற்காலிகமாக இல்லாமல் நிரந்தரமானதாக இருக்கவேண்டும்.

### பயன்தரும்பண்பு

சகிப்புத்தன்மை என்பது மிக கடினமான ஒரு பண்பு, ஆனால் அந்தப்பண்பை படிப்பில் முன்னேற ஆசைப்படும் ஒவ்வொருமாணவனும், மாணவியும் வளர்த்துக் கொள்ளவேண்டியது அவசியம். தமக்குத்தானே ஏற்படுத்திக்கொள்ளும் ஒரு ஒழுங்குமுறையும், சகிப்புத்தன்மையும், அவசியம் என்பதைமாணவமாணவிகள் உணரவேண்டும். அத்துடன், சிலவேளைகளில்குதூகலமான பொழுது போக்குகளைத் தியாகம் செய்யவும். பரீட்சை அல்லது படிப்பு முடியும்வரை அதிலேயே முழுகவனத்தையும் செலுத்தவேண்டும் என்பதையும் கருத்தில்கொள்ளவேண்டும். இவைகளை அனுசரிக்கும் எந்தமாணவமாணவியும் பரீட்சைகளில் சுலபமாக வெற்றி பெறலாம்.

### அக்கறை அவசியம்

ஒரு மாணவனின் அல்லது மாணவியின் கல்லூரி வாழ்க்கை மிக எளிதானதென நினைப்பவர்கள் உண்மையானகல்வி பற்றி அதிகம் அறியாதவர்களாகத் தான் இருக்கமுடியும்.

ஒரு பரீட்சைக்காக, மாணவர் ஒருவர் படிக்கிறார் என்றால் அதற்கான பாடங்களில்பயிற்சி பெறுவதற்கான ஒரு ஒழுங்குமுறையைப்பின்பற்றுவது நல்லது. முதலில், பாடத்தின் மீது அக்கறையை வளர்த்துக் கொள்ளப்பழக வேண்டும். ''இதுகிடக்கட்டும் வேறு ஒருபாடத்தை இப்போது படிப்போம்'' என்று முன்னுள்ளபாடத்தின் மீது சலித்துக் கொள்ளும் பழக்கம் தீமையேவிளைவிக்கும் ''இந்தப்பாடத்தை இப்போது படித்து கிரகித்துக் கொள்ளவேண்டும்,'' ''அந்தப்பாடத்தில்குறிப்பெடுக்க வேண்டும்'' ''இன்றிரவு அந்தக்கேள்விகளுக் கெல்லாம் பதில் கண்டுபிடித்துவிட வேண்டும்'' இந்த வாரமுடிவிக்குள் இந்தஅத்தியாயத்தை மனதில்பதித்தாகவேண்டும்'' இப்படியெல்லாம் அவ்வப்போது படித்தாகவேண்டிய பாடங்கள் பற்றி முடிவுகள் செய்துகொண்டுஆக்கரீதியாக காரியத்தில் இறங்கினால் வெற்றிக்கு மேல்வெற்றிதான்.

[இம்மாதிரி மாணவர்களுக்கு பயன்தரும் கட்டுரைகள் தொடர்ந்து பொன்வயலில் வெளிவரும்.]

## ஜெனிவாவில் 'ஈழநாடு'

ஈழநாடு பத்திரிகையில் வெளிவரும் 'பொன் வயல்' சிறப்பு அம்சம் பற்றி ஜெனிவாவிலுள்ள சர்வதேச தொழிலாளர் நல ஸ்தாபனத்தின் மத்திய அலுவலகத்துக்கு அறிவிக்கப்படவிருக்கின்றது.

ஆச்சரியமாக இருக்கின்றதா? முற்றிலும் உண்மை.

சர்வதேச தொழிலாளர் நலஸ்தாபனத்தின் தொழிலாளர் கல்வி நிபுணராக திரு. ஜாக்ஸ்விக்டர் மொரின் அண்மையில் இலங்கை வந்திருந்தபொழுது சர்வதேச தொழிலாளர் நலஸ்தாபனம்பற்றி எழுதிய கட்டுரை 'பொன் வயல்' பகுதியில் வெளிவந்ததை வாசகர்கள் மறந்திருக்க மாட்டார்கள். அந்தக் கட்டுரைகள் வெளிவந்த 'ஈழநாடு' பத்திரிகையின் பிரதிகள் திரு. மொரினின் கனடா காரியாலயத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டன. அவைகளைப் பெற்றுக்கொண்ட திரு. மொரின் நன்றி பாராட்டியிருப்பதுடன் அடுத்த முறை தாம் ஜெனிவாவுக்கு அறிக்கைசமர்ப்பிக்கும்பொழுது 'ஈழநாடு' பத்திரிகை பற்றியும் [illegible] ருக்கின்றார்.

## எழுத்தின் சக்திக்கு இரண்டு உதாரணம்

இந்தியாவில் தீண்டாமைவெகுவாக ஒழிவதற்கு காரணம் காந்தித் தாத்தா என்றால் மிகையாகாது. அதற்கும் அவருடைய எழுத்தின் வல்லமையே காரணம். ஹரிஜன பத்திரிகையிலும், 'யங் இந்தியா'விலும் அவர் எழுதிவந்த வலிமைவாய்ந்த எழுத்துக்கள் மிகவும் சக்திவாய்ந்தவை. இந்த பத்திரிகைகளில் அவர் எழுதிவந்த கட்டுரையால் தொற்றுநோயாகஇருந்ததீண்டாமை ஒழிந்ததென்றால் எழுத்தின் சக்தியைப் பற்றி நாம் கூறத் தேவைஇல்லை.

ஃ ஃ ஃ

ஆங்கில நாட்டில் ஆங்காங்கே அனாதைகள் விடுதிகள் நடத்தப்பட்டு வந்தன. அங்கு நடக்கும் கொடுமைகளை வாயினால் சொல்லிவிட முடியாது. பன்றிக்குக்கொடுக்கும் உணவிலும் கீழான உணவு, கிழிந்த அழுக்கான ஆடைகள் பொதுவாக அந்த அனாதைவிடுதியை நாம் அடிமைகள் விடுதி என்றே கூறலாம்.

அங்கு நடந்து வந்த அநியாயச் செயல்களைக்கண்டார் 'டிக்கென்ஸ்' மனம் கொதிப்படைந்தார். நேரில் அந்த அனாதை விடுதிகள் அதிபர்களுடன் பேசினார்; பலன் இல்லை.

சிந்தித்தார்; பேனாவும் பேப்பரும் அவர் முன் இருந்தன. அனாதை விடுதிகளில் நடக்கும் கொடுமைகளை உலகறியச் செய்யவேண்டும் என்று எண்ணினார். அல்லும் பகலும் எழுதினார் அதன் பலனாக 'ஒலிவர் டிவிஸ்ட்' என்ற நாவலை எழுதினார்.

ஆங்கில நாடு முழுவதும் அந்நாவலுக்கு ஏக கிராக்கி. எல்லோரும் விழுந்து, விழுந்து விழுந்து படித்தனர். பலன் அனாதை விடுதிகளில் வாசகர்களின் படைகள் திரண்டன; கொடுமைகள் ஒழிந்தன. என்னே 'எழுத்தின் சக்தி'

— 'சிந்தனைச்செல்வன்'

## கைக்குண்டு எறிந்ததாக வழக்கு

பருத்தித்துறை, புதன்

பருத்தித்துறையிலுள்ள தியேட்டரொன்றிற்கு கைக்குண்டெறிந்து, சேதம்விளைவித்ததாக ஒன்பதுபேர்மீது பருத்தித்துறைப் பொலிஸாரால்குற்றஞ்சாட்டித்தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. ஞெரூபேர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் நவரத்தினராசா, சிவரத்தினம், அருச்சுனராசா, தேவராசா, அருளானந்தம், சுந்தரலிங்கம், சிவபாதலிங்கம், ரகுநாதன், ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் கடந்த மாதம் 5-ம் தேதி சட்டவிரோதமாகக் கூட்டம்கூடி கைக்குண்டெறிந்து சேதம் விளைவித்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

வி. ஞானசேகரம் சாட்சியமளிக்கையில், சம்பவதினம் இரவு 7-30 மணிக்கு தியேட்டர் கேட் வாசலில் நின்று கொண்டிருந்ததாகவும், அப்போது ஒரு கூட்டத்தினர் தடிகள், பொல்லுகளுடன் வந்து தியேட்டரைத் தரைமட்டமாக்கப் போவதாகக் கூச்சலிட்டதாகவும், பின் தியேட்டர்மீது கைக்குண்டு வீசியதாகவும் கூறினார். இவ்வழக்கு விசாரணை இம்மாதம் 11-ம்தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் ஏ. அமிர்தலிங்கம், அட்வக்கேட் ஜெயக்கொடி ஆகியோர் ஆஜரானார்கள், பொலிஸாருக்கு உதவியாக வழக்கறிஞர்கள் வி. செல்லத்தம்பி, வி. பி. சுந்தரலிங்கம் ஆகியோர் ஆஜரானார்கள்.

## தச்சன்தோப்பு இரட்டைக் கொலைவழக்கு

சாவகச்சேரி, புதன்

தச்சன்தோப்பு இரட்டைக் கொலைவழக்கு இன்று சாவகச்சேரி மாஜிஸ்திரேட் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது யே. பெர்னாண்டோ (படம்வரைவாளர்) சாட்சியமளித்தார்.

இவ்வழக்கில் இவ்வருடம் யூன் மாதம் 12-ம் திகதி நா. சதாசிவம், ச. சந்திரபோஸ் ஆகிய இருவரையும் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் சார்பில் அட்வகேட் திரு. செருபிம் புறக்டர் ஆர். டீ. சிவகுருவின் அனுசரணையுடன் ஆஜரானார். வழக்காளி தரப்பில் அட்வகேட் திரு. ரீ.தம்பித்துரை புறக்டர் எஸ். பி. மயில்வாகனத்தினதும் சாவகச்சேரிப் பொலிசாரினதும் உதவியுடன் வழக்கை நடத்தினார்.

மேல் விசாரணை இம்மாதம் 14-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# உதைபந்தாட்டப்போட்டி: 'ஏ' பிரிவில்குருநகர் யுனைட்டெட் சாம்பியனனது 'பி' பிரிவில் ஒலிம்பிக் வெற்றி

யாழ்ப்பாணம், வியாழன்
யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கத்தின் ஆதரவில் இங்கு நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் 'ஏ' டிவிஷனில் குருநகர் யுனைட்டெட் விளையாட்டுக் கழகம் இவ்வருட சாம்பியனானது.

குருநகர் யுனைட்டெட்டுக்கும் அரியாலை யுனைட்டெட்டுக்குமிடையே நடைபெற்ற போட்டியில் குருநகர் நான்கு கோல்களைப்போட்டது. அரியாலை கோல் எதுவும்போடவில்லை.

'ஏ' டிவிஷனில் இது சாம்பியன் போட்டியாகவிருந்த பொழுதிலும் ரசிக்கக்கூடியதாக இருக்கவில்லை. குருநகர் கோஷ்டியினர் அதிகமான கோல்களைப்போட்ட போதிலும் கோல் அடிக்கும் பல சந்தர்ப்பங்களை இழந்திருந்தனர். இக்கோஷ்டியைச்சேர்ந்த அமிர்தநாயகம் மூன்று கோல்களும் சிறில் ஒரு கோலும் அடித்தனர். இப்போட்டிக்கு திரு. கிருஷ்ணன் மத்தியஸ்தராகக்கடமையாற்றினர்.

'பி' பிரிவு

'பி' டிவிஷனில் நடைபெற்ற போட்டியில், ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக்கழகம் சென். நிக்கிலஸை (3—0) வெற்றியீட்டியது.

இப்போட்டி ஓரளவு ரசிக்கத்தக்கதாகவிருந்தபோதிலும் சென் நிக்கிலஸ் கோஷ்டி, கோல் போடும் பல சந்தாப்பங்களை இழந்திருந்தது. இப்போட்டிக்கு திரு. கிருஷ்ணனின் மத்தியஸ்தராகக்கடமையாற்றினர்.

'பி' டிவிஷனுக்கான சாம்பியன்போட்டி நடைபெறவிருக்கிறது.

---

அரசாங்க ஊழியர்கள்

## அனுமதி பெற்ற பின்னரே காணி பெற்றுக் கொள்ளலாம்!

கொழும்பு, புதன்
இலங்கையரான அரசாங்க உத்தியோகத்தர்கள் காணி வாங்கும்பொழுது கவனத்தில் கொள்ள வேண்டிய முறைபற்றி உதவி நிறைசேரி அதிகாரி நிரந்தரக் காரியதரிசிகளுக்கும், திணைக்களத்தலைவர்களுக்கும், ஓர் சுற்றுநிருபம் அனுப்பிவைத்துள்ளனர்.

அச் சுற்றுநிருபத்திலவர் தெரிவித்திருப்பதாவது:

நிர்வாகவிதிகளுக்கமைய பலவே காணியை அரசாங்க உத்தியோகத்தர்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். ஏலத்தில்விற்கப்படும் காணிகளை பெறுவதற்குஅரசாங்க உத்தியோகத்தர்கள் மனுச் செய்ததால் அம் மனுக்களை விரைவில் பரிசிலனை செய்து அனுமதி வழங்கல் வேண்டும். விலைக்குப் பெறும் காணிகள் எந்த மாவட்டத்திலுள்ளதோ அந்த மாவட்ட அதிபருக்கும் உத்தியோகத்தர்கள் மனுச் செய்து காணி பெறுவதற்குரிய அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

அரசாங்க உத்தியோகத்தர்கள் காணிபெறும் பொழுது நிர்வாக விதிகளுக்கமையாது காணிகளைப் பெற்ற பின்னர் மனுச் செய்ததைத்தொடர்ந்தே இச்சுற்றுநிருபம் சகல அரசாங்க அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

---

## களை படுங்குவதில் மாணவரின் திறமை
### மந்திரி பாராட்டு

வவுனியா, புதன்
களை பிடுங்குவதில் திறமை காட்டி முதல் பரிசு பெற்றமைக்காக வவுனியா தமிழ் வித்தியாலய மாணவர்களை உணவு, விவசாய அமைச்சர் திரு. எம். டி. பண்டாவெகுவாகப்பாராட்டினர்.

திரு. பண்டா வவுனியா அபிவிருத்திப் பொருட்காட்சியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் மந்திரி பேசினர்.

மாணவர்களை சிறுவயது முதலே விவசாயத்தில் அக்கறையுள்ளவர்களாகப் பயிற்றுவித்தால் எதிர்காலத்தில் நாட்டில் வேலையில்லாத்திண்டாட்டம் குறைய வழி ஏற்படுமென்றார்.

---

## உபதலைவராக தெரிவு

குரும்பசிட்டி, புதன்
மயிலிட்டிக் கிராமசபையின் மாதாந்தக் கூட்டம் திரு. எஸ். அருணாசலம் தலைமையில் கிராமசபை அலுவலகத்தில் நடைபெற்றபோது 3-ம் வட்டார அங்கத்தவர் திரு. ஈ. ஞானபாக்கியம் உபதலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். தாம் உபதலைவராகத் தெரிவானமை குறித்து திரு. பாக்கியம் நன்றி தெரிவித்துப் பேசினர்.

---

## சாகித்திய விழா

குரும்பசிட்டி, புதன்
மல்லாகம் கிராம சபை ஆதரவில் சாகித்திய தினவிழா இம்மாதம் 18-ம் திகதி கொண்டாடப்பட வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் நடைபெறவிருக்கும் இவ் விழாவில் கலந்துகொள்ள உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர், வலி-வடக்குக் காரியாதிகாரி திரு. ரி. முருகேசம்பிள்ளை ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

---

## இசைக்கலை மன்றத்துக்கு எம்.பி. பாராட்டு

சாவகச்சேரி, புதன்
'ஒரு சமுதாயத்திற்கு அதன் கலை கலாச்சார ஒருமைப்பாடே மதிப்பைஅளிப்பதாகும். தென்மராட்சியில் கலைஞர்களும் ரசிகர்களும் அதிகரித்து வருவது இப்பகுதிக்குபெருமையளிப்பதொன்றாகும். இத்தன்மைக்கும் காரணமாக இருக்கும் இவ்விசைக்கலை மன்றத்தின் அரிய சேவையைப் பாராட்டுகிறேன்'' என்று சாவகச்சேரி எம்.பி. தென்மராட்சி இசைக்கலை மன்றத்தின் 5-ம் நாளிசை நிகழ்ச்சியின் தலைமையுரையின் போது குறிப்பிட்டார்.

---

## பஜனை கோஷ்டி

யாழ்ப்பாணம், புதன்
நல்லூர்த் தேர்த் திருவிழாவை முன்னிட்டுத் திவ்விய ஜீவன சங்கம் சுன்னாகம் கிளையின் ஆதரவில் சுன்னாகம் கதிரைமலைச் சிவன் தேவஸ்தானத்திலிருந்து இம் மாதம் 12-ம் திகதி இரவு ஒரு பஜனைக் கோஷ்டி யாத்திரையாகச் செல்ல இருக்கின்றது. இதில் சூராவத்தை முத்துமாரி அம்மன் ஆலய பஜனைக் கோஷ்டியினரும் கலந்து கொள்வர்.

---

## அச்சுத் தொழில்

புதுடில்லி, செப் 7
ஒருநாட்டின் வளர்ச்சியில் அச்சுத்தொழில் பெரும் பங்குவகிக்கிறதென்று உபஜனாதிபதி திரு. சாகிர் ஹூசைன் இங்கு கூறினர். சிறந்த புத்தகங்களுக்கும், அச்சுத்தொழில் கலைஞர்களுக்கும் பரிசு வழங்கும் வைபவத்திலேயே உபஜனாதிபதி மேற்கண்டவாறு சொன்னர்.

---

## காரைநகர் பிள்ளையார் கும்பாபிஷேகம்

காரைநகர், புதன்
காரைநகர் புளியங்குளம் ஆனந்தப் பிள்ளையார் கோவிலில் கும்பாபிஷேகம் சென்ற மாதம் 24-ம் திகதி முதல் இம்மாதம் 2-ம் திகதி வரை சிறப்பாக நடைபெற்றது. இப்பொழுது தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

---

## பிரிவுபசாரம்

சுழிபுரம், புதன்
பண்ணாகம் வடக்கு அம்பாள் நெசவு நிலையத்தில் கடமையாற்றி காரைநகர் வேம்படி நெசவு நிலையத்துக்கு மாற்றலாகிச் செல்லும் திருமதி எஸ். கண்ணனுக்கு ஓர் பிரிவுபசாரவிழா பண்ணாகம் வடக்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. க. ஏகாம்பரம் தலைமை வகித்தார். அன்னாரின் சேவையைப் பாராட்டி திருவாளர்கள் சி. செல்லத்துரை, சி. கந்தையா, வ. சுப்பிரமணியம், த. கந்தையா, வே. தேவராசா ஆகியோர் பேசினர். திருமதி பாராட்டுக்கு நன்றி தெரிவித்தார்.

---

## ரான்வெண்டுக்கு முதலிடம்

காலி, செவ்வாய்
தென்மாகாண பெண்கள் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற வருடாந்த விளையாட்டுப் போட்டியில் காலி திருஇருதயக் கல்லூரி கான்வென்ட் 123 புள்ளிகளை எடுத்து முதலிடத்தை தட்டிக்கொண்டது! சாம்பியன் வெள்ளிக்கிண்ணத்தையும் பறித்துக்கொண்டனர். இரண்டாவது இடத்தைபத் தேகம கிறிஸ்தவ சேர்ச் பெண்கள் பாடசாலை பெற்றது. இவர்களுக்குக்கிடைத்த புள்ளிகள் 75.

காலி விளையாட்டு மைதானத்தில் இப்போட்டிகள் நடைபெற்றன. ரோயல் சிலோன் ஏயர் போஸ் கமாண்டர் திரு. பி. எச். மெண்டிஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். திருமதி மெண்டிஸ் பரிசில்கள் வழங்கினர்.

---

## உடுப்பிட்டி அ. மி. பெண்களுக்கு முதலிடம்

அநுராதபுரம், புதன்
அகில இலங்கை மத்திய மகாவித்தியாலயங்களுக்கிடையேயான 11-வது வருடாந்த சாம்பியன் போட்டியில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பெண்கள் பாடசாலையினர் இரு முதலிடங்களைப்பெற்றுக்கொண்டுள்ளனர். இவர்கள் மத்திய பிரிவு, கீழ்ப்பிரிவு ஆகிய இரு பிரிவுகளிலும் அஞ்சல் ஓட்டப் போட்டியில் முதல் இடங்களைத் தட்டிக்கொண்டனர்.

---

## 1000 ஓட்டங்கள் பெற்ற 4-வது மேற்கிந்திய வீரர்
### கன்ஹாயின் அபார விளாசல்

ஸ்கார் பொரோ, (யோர்க்ஷயர்) செப். 7
நேற்று முன்தினம் இங்கு நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்திய வீரர்ரோகன் கன்ஹாய் ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களைப்பெற்றுக் கொண்டதன் மூலம் தற்போதைய கிரிக்கெட் சுற்றுப்பிரயாணத்தில் ஆயிரம் ஓட்டங்களை விளாசித்தள்ளிய மேற்கிந்திய கிரிக்கெட் வீரர்களில் நான்காவது இடத்தைப் பிடித்துக்கொண்டார்.

மேற்கிந்திய கோஷ்டிக்கும் ''ரி என். பியர்ஸன் XI '' கோஷ்டிக்குமிடையே நடைபெற்றுவரும் போட்டியில் மேற்கிந்தியா தனது இரண்டாவது இனிங்ஸில் 3 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 229 ஓட்டங்கள் எடுத்தது. இதில் ஆர். கன்ஹாய் ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்கள் எடுத்திருந்தார். 'ரி. என். பியர்செஸ்' கோஷ்டி தனது முதல் இன்னிங்ஸில் 5 விக்கட்டுகள் நஷ்டத்துக்கு 300 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது. மேற்கிந்தியா தனது முதல் இனிங்ஸில் 234 ஓட்டங்கள் எடுத்தது.

---

## சனிக்கிழமை 'மோதல்': கிளே தயார்

பிருங்கபேர்ட், (மேற்கு ஜெர்மன்) செப். 7
சனிக்கிழமை நடைபெறவிருக்கும் உலக அதிபார குத்துச்சண்டைப் போட்டிக்கு காஸியஸ்கிளே இப்பொழுது தகுதியாக மட்டுமன்றி தயார்நிலையிலும் இருப்பதாக இங்கு தெரிவிக்கப்பட்டது. உலக அதிபார குத்துச்சண்டை வீரர் திரு. காஸியஸ்கிளே மேற்கு ஜெர்மன் சவால்வீரர் கார்ல் மில்டென்பேர்க்குடன் சனிக்கிழமை மோதவிருக்கிறார்.

ஐரோப்பிய அதிபார குத்துச்சண்டை சாம்பியனை மில்டன் பேக்கர் முதல் தடவையாக காஸியஸ்கிளேயுடன் போட்டியிடவிருக்கிறார்.

''கிளே நூறுவிதம் தயார் நிலையில் இருக்கிறார்'' என்று கிளேயின் மனேஜர் தெரிவித்துள்ளார்.

---

## பாடசாலை அதிபர்கள் மூலம் பிரயாணச் சீட்டுகள்
### பெற்றேர் கோரிக்கை

சாவகச்சேரி, புதன்
பாடசாலை மாணவர்களுக்கு மாதாந்தப் பிரயாணச் சீட்டை பாடசாலை அதிபர் மூலம் வழங்கவேண்டும் எனவும் தற்போது கையாளும் முறையால் மாணவர்கள் மாதம் ஒரு நாளைக்கு டிப்போவிற்குச் செல்லவேண்டி இருப்பதால் அத்தினம்பாடசாலைக்குச் செல்லமுடியாதிருக்கிறதெனவும் பெற்ரூர் தூதுகோஷ்டி ஒன்று யாழ். கிழக்கு பஸ் டிப்போ அதிகாரியை பேட்டிகண்டபோது தெரிவித்தது.

அக்கோரிக்கையை டிப்போ அதிகாரி ஏற்றுக்கொண்டு உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறியுள்ளார் எனத் தெரியவருகிறது. தூதுகோஷ்டிக்குத் திரு. எஸ். கே. மயில்வாகனம் தலைமை தாங்கினர்.

---

## இலங்கை-இந்திய ஒப்பந்த மசோதா!
### விரைவில் வரும் என்கிறர் சேர்லி

சென்னை, செப். 7
இலங்கை-இந்திய ஒப்பந்த மசோதா இலங்கை பார்லிமெண்டில் விரைவில் கொண்டுவரப்படவிருப்பதாக இந்தியாவின் இலங்கை தூதுவர் திரு. சேர்லி அமரசிங்கா நேற்று இங்கு தெரிவித்தார்.

(பிடி ஐ.)

---

## இருதயத்தில் செயற்கை'பம்ப்'

ஹோஸ்டன், செப். 6
இருதயத்துக்குள் செயற்கை 'பம்ப்' (பீச்சி) ஒன்று பொருத்தப்பட்ட ஒருபெண்மணி குணமாகி இன்று இங்குள்ள மெதடிஸ்த ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறவிருக்கின்றார். இம்மாதிரி இருதயத்தில் அறுவை மூலம் 'பம்ப்' பொருத்தப்பட்டவர்கள் எவரும் இதுவரை குணமானது இல்லை. அசாதாரணமாக இந்தப்பெண்மணி குணமடைந்து விட்டது குறித்து டாக்டர்கள் இன்னும் பீதியுடனேயே இருக்கிறார்கள். மெக்ஸிகோ நகரைச்சேர்ந்த 37 வயதான திருமதி எஸ்பராின்சா டெல்வாலி வாஸ்குவாஸ் என்ற இப்பெண்ணுக்கு ஆகஸ்ட் 8 ம்திகதி அறுவை மூலம் இருதயத்தில் செயற்கை'பம்ப்'பொருத்தப்பட்டது. இம்மாதிரி அறுவைச்சிகிச்சைக்குள்ளான எவரும் இதுவரை பிழைத்ததில்லையாம்.

---

சுழிபுரம், புதன்
பொன்னாலையைச் சேர்ந்த சங்கீத பூஷணம் திரு. கே. கணபதிப்பிள்ளை அளவெட்டி சதாசிவ ஆங்கில பாடசாலைக்கு இசையாசிரியராக இம்மாதம் 7-ம் திகதி தொடக்கம் கல்வி இலாகாவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சகோதரருடன் பேசியபோது ஒற்றுக்கேட்கப்பட்டது

## ஜே. ஆர்., பிலிப், ஹெயினை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### அரசாங்கத்தை வீழ்த்த வேண்டும்

"இந்த இலட்சியத்தை அடைவதற்கு அரசாங்கத்தை வீழ்த்த வேண்டுமென்று ஹொந்தமுனி என்னிடம் தெரிவித்திருந்தார்.

கோவில்கள், இராணுவ தலைமைக் காரியாலயம், இராணிமாளிகை ஆகியவற்றைக் கைப்பற்றவேண்டுமென்றும் ஹொந்தமுனி தெரிவித்திருந்தார்" என்று சாட்சி ஒபாதா இன்று விசாரணையில் கூறினார்.

### கொலை செய்யும் திட்டம்

"பெரும் தலைவர்கள் கைது செய்யப்படவேண்டும் இவர்களில்சிலர்கொலை செய்யப்படலாமென்றும் கருதலாம். திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, திரு. பிலிப் குணவர்த்தன, பிரிகேடியர் ஹெயின் உட்பட வேறு சிலரும் கொலை செய்யப்பட வேண்டும். இராணுவத்திலுள்ள மற்றவர்கள் இதற்குத் தமக்கு ஆதரவளிப்பார்கள்என்று என்னிடம் ஹொந்தமுனி தெரிவித்தார்" என்று சாட்சி ஒபாதா கூறினார்.

### தளபதி உதவி

"இராணுவத் தளபதியின் ஆதரவு பின்னர் பெறப்படலாமென்று ஹொந்தமுனி என்னிடம் தெரிவித்தார்" என்றும் சாட்சி கூறினார்.

இவ்வித தகவல்களுடன் இடாப்பில் இரத்தத்தில் கையொப்பமிடுமாறு ஹொந்தமுனி எம்மிடம் கோரினார் என்றும் சாட்சி தெரிவித்தார்.

### "கடவுளை வேண்டினேன்"

ஒபாதா தொடர்ந்து சாட்சியமளிக்கையில் அந்த இடாப்பில் தாம் கையெழுத்திட்ட பின்னர் ஹொந்தமுனியின் வீட்டு அறையிலிருந்த கதிர்காமக் கடவுளிடமும் புத்த பிரானிடமும் தாம் பிரார்த்தித்துக் கொண்டதாகவும் இத்திட்டங்கள் ஒருபொழுதும் சரிவரமாட்டாது என்பதைத் தாம் உணர்ந்திருந்ததாகவும் கூறினார்.

"இடாப்பில் நான் கையெழுத்திட்டதற்கு நான் மிகவும் பயந்திருந்ததே காரணம்" என்றும் சாட்சி தெரிவித்தார்.

### தொடர்ந்து விசாரணை

"நான் இராணுவத்தில் சேரும்பொழுது என்பெயர் சிமியோன் அப்புஹாமியாக இருந்தது. பின்னர் எனது பெயரை ஒப்பத்தாவாக மாற்றிக்கொண்டேன். ஒப்பத்தா என்பது ஒரு கிராமத்தைக் குறிக்கும் பெயர். அதன் காரணமாக அப்பெயரை நான்சூட்டினேன்.

இரண்டாவது புரட்சிச் சதிவழக்கு நேற்று மதிய போசன இடைவேளைக்குப் பின்னர் மீண்டும் விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டபோது சார்ஜன்ட் ஏச். டி. என். ஏ. ஒப்பத்தா மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து ஒப்பத்தா சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

### உண்மையைத் தெரிவித்தேன்

மூன்று வெவ்வேறு சமயங்களில் இன்ஸ்பெக்டர் என்னை விசாரணை செய்தார், அந்த மூன்று சந்தர்ப்பங்களிலும் புரட்சி சதியைப்பற்றி எதுவுமே தெரியாதென இன்ஸ்பெக்டர் கந்தையாவிடம் தெரிவித்தேன். ஆனால் நான்காம் முறையாக விசாரணை செய்யப்பட்டபோது நான் எனக்கு தெரிந்த முழு உண்மைகளையும் கூறினேன். எனது மனம்மாறி உண்மை கூறவேண்டியதற்குக் காரணம் எனதுமனம் உண்மை கூற மறுத்ததையிட்டு சஞ்சலமடைந்திருந்ததே.

ஆறு மாதங்களுக்கு முன் மதுஅருந்தும் நிலையத்தில் 800 ரூபா குறைவாகக் காணப்பட்டது. அதில்நான் 120 ரூபா மட்டுமே செலுத்தினேன். ஆனால் அதுசம்பந்தமாக எதுவித நடவடிக்கையும் எனக்கெதிராக எடுக்கப்படவில்லை. இதனால் நான் குற்றவாளியாகக் காணப்படவில்லை.

### பாதுகாப்பு அமைச்சு உத்தரவு

குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது ஒப்பத்தா மேலும் கூறியதாவது:—

இராணுவ தளத்திற்கு அருகாமையிலுள்ள வீதிஒன்றில் காணப்பட்ட பௌத்த கொடிகளையும் சோடனைகளையும் அகற்றும்படி பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டிருந்தது. இராணுவ நிலையத்தில் 'பிரித்ஓதும்' நிகழ்ச்சியொன்று நடைபெறவிருந்தது. பௌத்த குருமார்கள் ஊர்வலமாகச் செல்ல அனுமதிக்கக்கூடாதென்றும் எனக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

### "6 தடவைகள் சென்றேன்"

நான் இரகசியப் பொலிசாரிடம் ஆறுமுறை சென்றேன். நான் கிராமப்புறத்திலுள்ள ஒரு பாடசாலையில் கல்விகற்றேன். சிலசமயங்களில் நான் அங்குதான் வசிப்பதுண்டு. பௌத்த வளர்ச்சிக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் எடுக்கப்பட்டுவந்த நடவடிக்கைகளுக்குநான் ஆதரவாயிருந்து வந்தேன்.

இதன் பின்னர் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்பட்டார். விசாரணை நாளையும் தொடர்ந்து நடைபெறும்.

---

## மரண அறிவித்தல்

### திருமதி சி. கண்ணம்மா

காலஞ்சென்ற திரு. சி. சின்னத்தம்பியின் அருமை மனைவியும் திரு. சி. பொன்னுத்துரையின் (யாழ். மாநகரசபைலிகிதர்)பேத்தியாரும் திரு. சி. சிவக்கொழுந்துவின் மாமியாருமாகிய கண்ணம்மா அவர்கள் காலமாகிவிட்டார். அன்னாரின் பூதவுடல் இன்று (8-9-66) பிற்பகல் 3-30 மணியளவில் திருநெல்வேலி தெற்கு பலாலி வீதியிலுள்ள 'அம்பிகா பவனம்' இல்லத்திலிருந்து தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். தகவல் தருபவர்: சி. பொன்னுத்துரை 'அம்பிகாபவனம்' திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

1109

---

## இலங்கையின் அபிவிருத்தி

கொழும்பு, புதன்

இலங்கைக்கு உதவியளிக்கவிருக்கும் நாடுகளின் சபை இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்கள் பற்றியும் அவற்றுக்குத் தேவையான நிதி பற்றியும் டிசம்பர் மாதத்தில்கூடி ஆலோசனை செய்யவிருக்கின்றன.

அமெரிக்கா, பிரிட்டன், கனடா, மேற்கு ஜெர்மனி, பிரான்ஸ், ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் இலங்கைக்கு உதவியளிக்கவிருக்கின்றன.

இந்த நாடுகளின் சபை இலங்கையின் பொருளாதாரம்பற்றி உலகவங்கி ஆலோசகர்கள் தயாரித்த அறிக்கையொன்றைப் பரிசிலனைசெய்யும் உலக வங்கியின் பொருளாதாரத் தூதுகோஷ்டி இம்மாத பிற்பகுதியில் இலங்கைவந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது. தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் இலங்கையின் பொருளாதார நிலை பற்றி இத்தூதுகோஷ்டி ஆராய்ந்து, அரசாங்கம் எடுத்துள்ள பொருளாதார நடவடிக்கைகள் பற்றி அறிக்கை சமர்ப்பிக்கும்.

இரண்டு தடவைகளாக 50 கோடி ரூபாய் இலங்கைக்கு உதவி வழங்க, இந்த உதவி நாடுகள் சபை ஒப்புக்கொண்டிருக்கிறது.

---

## 'நான் கட்சியிலிருந்து விலகமாட்டேன்'

மூதூர், புதன்

"எனது எதிரிகள் வீண் வதந்திகளை பரப்பிவருகின்றனர் ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நான் எனது அரசியல் கட்சியிலிருந்து விலக எக்காரணமுமில்லை. ஆனால் நான் தெரிவிக்கும் கருத்துக்களையும் எனதுபேச்சுக்களையும் எனது அரசியல் கட்சி விரும்பாவிட்டால் அவர்கள் எந்தவிதமான நடவடிக்கையையும் எடுக்க அவர்களுக்கு உரிமையுண்டு' என்று பாராளுமன்ற உறுப்பினர் திரு. எம். ஈ. எச். முகமட்அலி கந்தளாயில நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

---

## முல்லைத்தீவுக்கு சுருக்கப் பாதை

யாழ்ப்பாணம், புதன்

பரந்தன் — முல்லைத்தீவு ரோட்டு தற்பொழுது சீர்திருத்தப்பட்டு வருகிறது. இந்த ரோட்டு முற்றாகச் சீர்திருத்தப்பட்டால், முல்லைத்தீவு செல்வதற்கு 27கட்டை குறையும்.

இந்த ரோட்டை சீர்திருத்தவேண்டுமென சங்கங்கள் மூலம் மக்கள் அரசாங்கத்தைக் கேட்டிருந்தனர். இப்பகுதியில் வாழும் நூற்றுக்கணக்கான கமக்காரர்கள் இப்புதிய பாதையினால் பயனடைவார்கள். ரோட்டு சீர்திருத்தப்பட்ட பின், உடனடியாக பஸ் சேவையொன்றை ஆரம்பிக்க, இ. போ. ச. சாதித்திருக்கிறது.

---

## ரூ. 33586 லாபம்!

சுழிபுரம், செவ்வாய்

யாழ்ப்பாண மாகாண ஐக்கிய கூட்டுறவு வங்கி சென்ற ஆண்டில் இலாபமாக ரூ. 33586-75 சதம் பெற்றுள்ளது. அங்கத்துவ கூட்டுறவுச் சங்கங்களுக்கு [illegible] கைப் விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## டெலிபோன் கமிஷன்முன் ராஜாங்க மந்திரி சாட்சியம்

### "என்னிடம் கேட்காமலே எனது டெலிபோன் மாற்றப்பட்டது"

கொழும்பு, புதன்

முந்திய அரசாங்கம் பதவியிலிருந்தபோது தாம் டெலிபோனில் பேசிக் கொண்டிருக்கும் போது ஒற்றுக்கேட்கப்பட்டதாகவும் தாம் கேட்டுக்கொள்ளாமலேயே தமது டெலிபோன் மாற்றப்பட்டு வேறொரு டெலிபோன் வைக்கப்பட்டதாகவும் ராஜாங்கமந்திரி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன டெலிபோன் ஒற்றுக்கேட்டல் விசாரணைக்கமிஷன் முன் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்.

திரு. ஜே. ஆர். மேலும் கூறியவாவது:

1961-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் பார்லிமெண்டில் நடைபெற்ற விவாதத்தின் போது வெளியான சில விஷயங்களிலிருந்து எனது டெலிபோன் ஒற்றுகேட்கப்பட்டது என்பதை நான் அறிந்து கொள்ள முடிந்தது.

1964-ம் வருடம் டிசம்பர் மாதத்தில் அதாவது கூட்டரசாங்கம் வீழ்ச்சியடைவதற்கு சில நாட்களுக்குமுன்பாக நானும் எனது சகோதரரும் வழக்கறிஞருமான திரு. எச். டபிள்யு. ஜெயவர்தன கியூ. சி. யும் டெலிபோனில் ஒரு சட்ட அம்சம்பற்றி ஆலோசனை செய்துகொண்டிருந்தோம். இந்தச்சட்ட அம்சமே இறுதியில் முந்திய அரசாங்கத்தை ஜனப்பிரதிநிதிகள் சபையில் வீழ்ச்சியடையச் செய்தது. இந்தச்சட்ட அம்சத்தை நான் பார்லிமெண்டில் எடுத்துக்கூற முன்னர் நானும் டெலிபோன் மூலம் எனது சகோதரரும் இது பற்றி கலந்து ஆலோசனை நடத்தியதை கூட்டரசாங்கத்தின் சில அங்கத்தவர்கள் தெரிந்து வைத்திருந்தார்கள். இதிலிருந்து நான் பேசிக்கொண்டிருந்த போது எனது டெலிபோன் ஒற்றுக்கேட்கப்பட்டது என்ற ஒரே முடிவுக்கு நான் வரவேண்டியிருந்தது. இவ்விதம் சேகரிக்கப்பட்ட தகவலைக் குறிப்பிட்ட சாரார் தமது சொந்த நலனுக்காக உபயோகப்படுத்திக் கொண்டார்கள் என்பதும் ஊகிக்கக்கூடியதாக இருந்தது.

எனது டெலிபோனில் வழக்கத்துக்குமாறாக ஒரு பிரத்தியேக வயரும் இணைக்கப்பட்டிருந்தது. நான் வேறொரு டெலிபோன் எனக்குத் தேவையெனக் கேட்காமலேயே வேறொரு டெலிபோன் மாற்றப்பட்டது. இவ்விதம் மற்ற டெலிபோனில் பேசுவதற்கு 'ரிஸிவரை' எடுத்தால் ஒருபுதுவித சப்தம் கிளம்பும்.

### என். கியூ. டயஸ் சாட்சியம்

பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் முன்னாள் நிரந்தக் காரியதரிசி திரு. என். கியூ டயஸ்இக்கமிஷன் முன் இன்று சாட்சியமளிக்கையில் கமிஷனின் முடிக்குரிய வழக்கறிஞர்கமிஷனுக்கு உதவி புரியாமல் ஒருவழக்கை நடத்துவது போல் நடந்து கொள்கிறார் என புகார் தெரிவித்தார்.

---

## வகுப்புத் தொழிலாளர் பிரச்னை 18-ந் திகதி மகாநாடு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் உணவு விநியோகநிலையத்தில் வேலை செய்யும், இலங்கைப் பிரஜைகளல்லாதவர்கள் பிரச்சனை பற்றி இன்று கொழும்பில் நடைபெறவிருந்த மகாநாடு இம்மாதம் 18-ம் தேதிக்குபின்போடப்பட்டுள்ளது.

இம் மகாநாட்டினை கூட்டுவதற்கான ஒழுங்குகளை தொழில்கமிஷனர் செய்திருந்தார். 18-ம்தேதி நடைபெறும் மகாநாட்டில் நியமன எம். பி. திரு. எஸ். தொண்டமான் கலந்து கொள்வார்.

ஸ்ரீமா—சாஸ்திரி ஒப்பந்தத்தில் ஒரு ஷரத்தை சுட்டிக்காட்டி இலங்கைப் பிரஜைகளல்லாதவர்களை, வேலைநீக்கம்செய்யக் கூடாதென திரு. எஸ். தொண்டமான் தொழில் கமிஷனுக்கு ஆட்சேபித்துள்ளதாக அறியப்படுகிறது.

---

## நகரசபை, பட்டின சபை தேர்தல்கள்

யாழ்ப்பாணம், வியா

சாவகச்சேரி நகரசபை, சுன்னாகம் பட்டினசபை தேர்தல்கள்டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கிறது. இதற்கான ஒழுங்குகளை தேர்தல் அதிகாரி செய்து வருகின்றார்.

இத்தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் அடுத்த மாத இறுதியில் தாக்கல் செய்யப்படும் என அறியப்படுகிறது.

---

## திரு. பொன்னம்பலம்..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

படவில்லை, மாவட்டசபைகளைப் பற்றிப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் எங்களுக்கும் பிரதம மந்திரிக்குமிடையில் நடைபெறும். மசோதா உரிய நேரத்தில் எந்தத் தனிப்பட்டவரின் வருகையையும்காத்திராமல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

---

## மரண விசாரணை அதிகாரி நியமனம்

யாழ்ப்பாணம் வியா.

நியாயதுரந்தர் திரு. கந்தையாபிள்ளை சேனாதிராஜா வலிகாமம் மேற்கு பதவிக்கு திடீர் மரண விசாரணை அதிகாரியாக 24-8-66 தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

---

## நெற்காணி பிரசார கூட்டம்

யாழ்ப்பாணம், வியா.

நெற்காணி சட்டத்தின் பிரசாரக் கூட்டம், கண்டாவளை அரசினர் பாடசாலையில், திரு. எஸ். கிருஷ்ணபிள்ளை தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நெற்காணிச் சட்டத்தின் நோக்கம் பற்றியும், பயிற்செய்கைகுழுவின் நன்மைகள் பற்றியும் தலைவர் கூறினார். உத்தியோகத்தர் தெரிவிற்கான கூட்டம் இம்மாதம் 21-ம் திகதிக்குப் பின்போடப்பட்டது.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி [illegible] அச்சகத்தில் 1966-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org